பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 மார்கழி 24 திங்கட்கிழமை 08.01.2018 கதிர் 64

## தேர்தல் முறைப்பாடுகள் இதுவரை 231

வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதன்பின்னர் இதுவரைதேர்தல் சட்டங்களைமீறியமைதொடர்பாக, 231 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாக, 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த முறைப்பாடுகளுக்கு அமைய, 103 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது



# பிணைமுறி விவகாரம் குறித்து விவாதிக்க ரணில் தயாராம்!

## நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு சபாநாயகரை கோருகிறார் அவர்

**கொழும்பு, ஜனவரி 08**

**மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக் குழுவின் அறிக்கை குறித்து விவாதிக்கத் தயார் என்று அறிவித்துள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அதற்காக நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் வேண்டு கோளும் விடுத்துள்ளார்.**

**மஹிந்த ஆட்சியிலும் பாரிய மோசடிகள் பல நடந்துள்ளன. ஒரு லட்சம் கோடி ரூபாவை மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்குக் கடன் சுமையாகச் சுமத்தி விட்டுச் சென்றுள்ளார் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் 71 ஆவது தேசிய மாநாடு கொழும்பு, கெம்பல் பார்க் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பக்கம் 18 »



## தமிழீழமா? ஒற்றையாட்சியா? தீர்மானிக்கும் தேர்தல் இது!



### மஹிந்த கூறுகின்றார்

தமிழீழமா, ஒற்றையாட்சி இலங்கையா என்பதைத் தீர்மானிக்கும் விடயமாக இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பக்கம் 18 »

## போருக்குப் பிள்ளையார் சுழி போட்டவர் தந்தை செல்வாவே!

### வவுனியாவில் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. விளக்கம்

வவுனியா, ஜன. 08

ஆயுதப் போராட்டத்துக்குச் சுழி போட்டவர் தந்தை செல்வா. அவர் போட்ட பிள்ளையார் சுழி தான் முப்பது வருடகாலத்தில் ஆயுதப்போராட்டம் உச்சகட்டத்தை அடைந்து தமிழ் மக்களை உலகம் திரும்பிப்பார்க்கவைத்தது.

– இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா – கிடாச்சூரிக் கிராமத்தில் நேற்று முன் பக்கம் 18 »

## யாழில் கூட்டமைப்பில் போட்டியிடும் முஸ்லிம் வேட்பாளர்கள் அறிமுகம்



யாழ்ப்பாணம் மாநகர சபைக்காகதமிழ்த்தேசியக் கூட்டமைப்பைப் பிரதிநிதித்துவப்படுத்திப் போட்டியிடும் முஸ்லிம் பக்கம் 03 »

## தீர்வு மாயையைக் காண்பித்து வாக்குச் சூறையில் கூட்டமைப்பு

### சுமந்திரனின் கருத்துக்கு சுகாஷ் பதிலடி

யாழ்ப்பாணம், ஜன.08

அரசியல் தீர்வு என்ற மாயையைக் காண்பித்துத் தமிழ் மக்களுடைய வாக்குகளைச்சூறையாடுவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முயற்சிக்கின்றனர். ஆனால் தமிழ் மக்களை நீண்ட காலத்துக்கு முட்டாளாக்க முடியாது என்பதைக் கூட்டமைப் பினர் உணர வேண்டும்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் சட்டத்தரணி பக்கம் 18 »

### இது ரகசியம் அல்ல!

உள்ளூராட்சி தேர்தல் முடிவு பெப்ரவரி 11 ஆம் திகதிவரும்போது கூட்டமைப்புக்கான மக்கள் ஆதரவு சரிந்து விட்டது என்ற பக்கம் 03 »

## இல்லாததையும் பொல்லாததையும் எழுதி தமிழரைக் குழப்ப முற்படுகிறார் முதல்வர்!

### தமிழரசுக் கட்சிச் செயலாளர் குறைகூறி விசனம்



மட்டக்களப்பு,ஜன.08

கற்றூணாய் நொருங்கு வோமன்றி, காலமறிந்து செயற்படோம் என்றிருப்பது தமிழர் தம் தலைவிதியாக மாறிவிடக் கூடாது என்பது என் எண்ணம். ஏற்பட்டுள்ள சூழ்நிலையைத் தவறவிடாது பக்கம் 18 »



## ஊடகங்களை எதிர்த்து தேர்தலில் வெல்வோம்!

### சுமந்திரன் எம்.பி. சவால்





(த.சுபேசன்)

யாழ்ப்பாணம், ஜன. 08

"ஊடகங்களைப்பகைத்துத்தேர்தலில் வெல்ல முடியாதா? அவற்றை எதிர்த்துத் தேர்தலில் வெல்ல முடியும்."

– இவ்வாறு உறுதிபடத் தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச் பக்கம் 18 »

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir



# போராட்டமும் அதன் வலியும் தெரியாத சுமந்திரனே தமிழர்களுக்கு விரோதமாகச் செயற்படுகின்றார்!

வவுனியா, ஜன. 08

போராட்டமும் அதன் வலியும் தெரியாத சுமந்திரனே தமிழர்களுக்கு விரோதமாகச் செயற்படுகின்றார் என ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியா தெற்குத் தமிழ்ப் பிரதேசசபையில் கிடாச்சூரி வட்டாரத்தில் போட்டியிடும் அ. அருந்தவராசாவை ஆதரித்து இடம்பெற்ற கூட் டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழ் மக்களுக்கு சரியான தீர்வு வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களாகிய நீங்கள் உங்கள் உடைமைகள் உறவுகளை இழந்திருக்கின்றீர்கள்.

ஆனால், இன்று அதையெல்லாம் மூடை கட்டிவைத்துவிட்டு சுமந்திரன் என்ற நபருக்கு வடக்குக் கிழக்கைப் பற்றிப் போராட்டத்தைப் பற்றி அதன் வலிகளைப்பற்றி என்ன தெரியும். கொழும்பில் பிறந்து வளர்ந்து கொழும்பில் படித்து கொழும்பில் உத்தியோகம் பார்த்த ஒருவருக்கு இந்த வலிகள் புரியுமா என்பதனை நீங்கள் எண்ணிப் பாருங்கள்.

அதன் காரணமாகத்தான் அவரது செயற்பாடுகள் தமிழர்களுக்கு விரோதமாக இருக்கின்றன.

அவர்தற்போது கூறுகின்றார் இடைக்கால அறிக்கையில் நாம் அரைவாசித் தூரம் போய்விட்டோம். மிகுதி அரைவாசித் தூரம் போகவேண்டுமாக இருந்தால் நீங்கள் எங்களுக்கு ஆணை தரவேண்டும் என்கின்றார். அது இல்லாத ஒன்றுக்கான ஆணை.

இடைக்கால அறிக்கை என்பது தமிழ் மக்களைக் குழிதோண்டிப் புதைக்கக்கூடிய விடயம் என்பதைப் புரிந்துகொண்டு அதற்கு ஆணை கேட்கின்றார். நீங்கள் வீட்டிற்கு போடும் புள்ளடியென்பது நாங்கள் எங்களைக் குழிதோண்டிப் புதைப்பதற்கான ஆணையென்பதேயாகும்.

தந்தை செல்வாவின் சின்னம் வீடாக இருக்கலாம்.

தமிழர் விடுதலைக்கூட்டணி வந்ததன் பின்னர் உதய சூரியனாக இருக்கலாம். அது சில காலம் முடக்கப்பட்டதனால் மீண்டும் வீட்டுக்குப் போகலாம்.

ஆனால், நாம் இங்கு பார்க்க வேண்டியது கொள்கை ரீதியாக எமது தீர்வைப் படிப்படியாக வேனும் பெற்றுக்கொள்ளப் போகின்றோமா இல்லையேல் எங்களை ஒட்டுமொத்தமாக விலைபேசி விற்கப்போகின்றோமா? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (க)



சுரேஸ் பிறேமச்சந்திரன் தெரிவிப்பு

## ‘மசாஜ்’ நிலையம் என்ற பெயரில் சமூக விரோத பாலியல் தொழில்

### கல்கிஸ்ஸையில் 6 பெண்கள் கைது

மசாஜ் நிலையம் என்ற பெயரில் இயங்கிய பாலியல் தொழில்விடுதியை முற்றுகையிட்ட பொலிஸார் 6 பெண்கள் உட்பட 7 பேரைக் கைது செய்துள்ளனர்.

கல்கிஸ்ஸை நீதிவான் நீதிமன்றத்தில் பெறப்பட்ட தேடுதல் அனுமதியுடன் இரத்மலானை பிரதேசத்தில் இந்த முற்றுகை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை மேற்கொள்ளப்பட்ட இந்த முற்றுகையில், பாலியல் தொழில் விடுதியின் முகாமையாளர் எனக் குற்றம் சுமத்தப்படும் ஆண் ஒருவரையும் அங்கு பாலியல் தொழிலில் ஈடுபடக் காத்திருந்த 6 பெண்களையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டபெண்கள், 22, 23, 26, 27, 41 மற்றும் 41 வயதானவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்கள் கொட்டாவை, உடபுஸ்ஸலாவை, கந்தபொலை, மன்னார் மற்றும் பல்லேபெத்த பிரதேசங்களை சேர்ந்த பெண்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் கல்கிசை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர்.

சம்பவம் தொடர்பான கல்கிசை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

## சாதகமான பதில் கிடைக்கத்தவறினால் அடுத்த கட்ட நடவடிக்கை எடுப்போம்

வவுனியா, ஜன. 08

வவுனியா புதிய பஸ் நிலையத்திற்குள் வியாபாரம் செய்வதற்குத் தமக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது என நடமாடும் வியாபாரிகள் சகவாழ்வுச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், மையப் பஸ் நிலையத்தில் மாற்றுவழி குறித்து சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதில் உறுப்பினர்களின் கருத்துக்களும் உள்வாங்கப்பட்டுள்ளமையுடன் இன்று காலை 10மணியளவில் புதிய பஸ் நிலையத்திலுள்ள தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களிடமிருந்து சந்திப்பு ஒன்றிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்றைய சந்திப்பில் எமக்கு சாதகமான பதில் கிடையாது விட்டால் மேற்கொண்டு வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்தித்து எமது சங்க உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் நிலைமைகளை எடுத்துக்கூறி கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளவும் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன், நாங்கள் கடந்த 7 தினங்களாக பணியின்றி இருந்து வருகின்றோம். எனவே, எமக்கு சாதகமான பதில் இன்று கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம் எனவும் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடலின் பின்னர் நடமாடும் வியாபாரிகள் சகவாழ்வு சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



வவுனியா பஸ் நிலைய நடமாடும் வியாபாரிகள் குமுறல்

## வவுனியா பழைய பஸ் நிலையத்தில் இரு வேறு வகையான சுவரொட்டிகள்!




வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதியில் இரு வேறுபட்ட சுவரொட்டிகள் நேற்றுக் காலை முதல் காணப்படுகின்றன. எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சுவரொட்டியில் ‘மக்களே ஏமாறாதீர்கள்! இலவச சுகாதாரத்தைச் சிதைக்கும் மாணவர் பாதுகாப்பு காப்புறுதி ஓர் மோசடி’ என்றும் ‘பாடசாலைப் புத்தகங்கள் விற்பனைக்கு’ இவ்வாறு எழுதப்பட்ட சுவரொட்டிகள் வவுனியா பழைய பஸ் நிலையப் பகுதிகளில் காணப்படுகின்றன.

இந்த சுவரொட்டிகள் வவுனியா அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஒட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சீனிப்பாணி விற்பனை செய்த இருவர் வவுனியா நெளுக்குளத்தில் கைது!



வவுனியா நெளுக்குளம் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட ஊர்மிளாக்கோட்டம் பகுதியில் சீனிப்பாணியைக் காய்ச்சித் தேன் என விற்பனை செய்த பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா சுகாதார பரிசோதகர்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றுமுன்தினம் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் தியாகலிங்கம், பொது சுகாதார பரிசோதகர் வோல்ட்டயன் ஆகியோரின் தலைமையிலான குழுவினர் நெளுக்குளம் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொண்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது ஊர்மிளாக் கோட்டம் பகுதியில் வீடொன்றில் சீனிப்பாணி காய்ச்சிய 38 வயதுடைய பெண் ஒருவரையும் 26 வயதுடைய ஆணொருவரையும் கைது செய்துள்ளனர்.

அவர்களிடமிருந்து போத்தலின் தேன் என அடைக்கப்பட்டிருந்த 73 போத்தல் சீனிப்பாணியையும் சுகாதார சீர்கேடான முறையில் காய்ச்சப்பட்ட 2 அரை பீப்பாய் சீனிப்பாணியையும் பட்டா வாகனமொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தியபோது இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பத் திரும்ப பொய்யையே உரைக்கும் ஊடகங்களை மக்கள் தூக்கி எறிவார்கள்!

## பத்திரிகைகள் மீதான தாக்குதலில் சுமந்திரன் தீவிரம்

யாழ்ப்பாணம், ஜன.08

'ஏக்கிய இராச்சிய' என்பது ஒற்றையாட்சி அல்ல என புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. அதனை விட ஒற்றையாட்சி இலங்கைக்கு பொருத்தமற்றது என இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றது. இப்படி இருக்க ஒற்றையாட்சிக்கு நாங்கள் இணங்கினோம் என ஊடகங்கள் தொடர்ந்து பொய்யைச் சொல்கின்றன.

– இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஊடகங்கள் மீது குறைகூறினார்.

உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களை அறிமுகம் செய்வதற்கான பொதுக் கூட்டம் நேற்று யாழ்.ஒஸ்மானியா கல்லூரி வீதியில் நடைபெற்றது. இந்தப் பொது கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார். இதன்போது மேலும் அவர் கூறுகையில் –

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கையில் ஒற்றையாட்சி இலங்கைக்கு பொருத்தமற்றது என கூறப்பட்டிருக்கின்றது. மேலும் 'ஏக்கிய இராச்சிய' என்பது ஒற்றையாட்சி அல்ல, அது ஒருமித்த நாடு என்பதும் இடைக்கால அறிக்கையில் எழுதப்பட்டிருக்கிறது. ஒருமித்த நாடு என்பதற்கே நாங்கள் இணங்கினோம். ஆனால் நாங்கள் ஒற்றையாட்சிக்கு இணங்கிவிட்டோம் என ஊடகங்கள் பொய்யைத் திரும்ப திரும்பச் சொல்கின்றன.

ஊடகங்களைப் பொய் சொல்ல வேண்டாம் என நான் திரும்ப திரும்ப கூறிக் கொண்டிருக்க என்னைப் பார்த்து சிரிப்பதுபோலவும், மக்களைப் பார்த்து ஏளனம் செய்வதுபோலவும் ஊடகங்கள் திரும்ப திரும்ப பொய்யைச் சொல்கின்றன. ஊடகங்கள் நினைக்கக்கூடாது – தாங்கள் சொல்வதைதான் மக்கள் நம்புவார்கள் என்று.

மேலும் சிலர் ஊடகங்களைப் பகைத்தால் தேர்தலில் வெற்றியடைய இயலாது எனச் சொல்கிறார்கள். ஊடகங்களுக்குப் பயந்து நாங்கள் மக்களிடம் சென்று பொய்யைச் சொல்ல இயலாது. எவ்வளவு பலமான ஊடகங்களாக இருந்தாலும் நாங்கள் மக்களிடம் சென்று உண்மையைதான் சொல்வோம். பொய் சொல்லும் ஊடகங்களைப் பகைத்தே நாங்கள் தேர்தலில் வெற்றியடையவேண்டும்.

70 வருடங்களாக தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள், சிங்கள மக்கள் அனைவரும் சொல்லணா துயரங்களைச் சந்தித்தார்கள். அந்த துயரங்களுக்கு ஒரு தீர்வைக் காணவேண்டும், ஒரு தீர்வுத் திட்டத்தை உருவாக்க வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முயற்சித்துக் கொண்டிருக்கையில், சில அரசியல் தரப்புக்களைப்போல் ஊடகங்களும் பொய்யைச் சொல்லிக் கொண்டிருக்கின்றன. இடைக்கால அறிக்கையில் தமிழ் மக்களை ஏற்காத ஒரு விடயம் கூட இடம்பெறவில்லை. எனவே ஊடகங்கள் பொய் சொல்வதை நிறுத்தவேண்டும், நீங்களாகத் திருந்தவேண்டும். இல்லையேல் திருத்தப்படுவீர்கள். மக்களாக ஊடகங்களைத் தூக்கி எறியும் நிலை உருவாகும். – என்றார்.

# இலங்கை கிரிக்கெட்டுக்கு புதிய செயலாளர் நியமனம்

'இலங்கை கிரிக்கெட்' நிறுவனத்தின் புதிய செயலாளராக விமானப்படை கொமாண்டர் ரொஷான் பியன்வில நேற்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் நடைபெற்ற விசேட கூட்டத்தில் இந்த நியமனம் இடம்பெற்றதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# பட்டத்தின் வயர் மின் வடத்துடன் உரசியதால் இளைஞன் உயிரிழப்பு

## புத்தூர் - மீசாலை வீதியில் பரிதாபம்

புத்தூர் – மீசாலை வீதியில் பட்டம் ஏற்றிக்கொண்டிருந்த போது பட்டத்திற்கு பொருத்தியிருந்த மின்சார வயர் வீதியால் சென்ற பிரதான மின்வடத்துடன் உரசுண்டதில் இளைஞனொருவர் தூக்கி வீசப்பட்ட நிலையில் அச்சு வேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற போது இடை நடுவில் பரிதாபமாக உயிரிழந்தார். இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

புத்தூர் கிழக்குப் பகுதியினை சேர்ந்த பாஸ்கரன் டர்சன் (வயது – 19) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவர் என அச்சுவேலிப் பொலிஸார் கூறினர்.

தற்போது பட்டம் விடும் சீசன் ஆரம்பித்துள்ளது.

உயர்தரத்தில் கல்வி பயிலும் இந்த இளைஞன் நேற்று மாலை சக நண்பர்களுடன் இணைந்து பட்டம் ஏற்றியுள்ளார். இரவு நேரம் பட்டம் தொடர்ந்து நிற்பதற்காகவும், மின்குமிழ்கள் பொருதப்பட்டு அதற்கு மின்சார இணைப்பும் வழங்கப்பட்டிருந்ததாக கூறப்பட்டது.

வீதியில் நின்று ஏற்றிய பட்டத்தை வயல் தரவைக்குள் எடுத்து செல்ல முற்பட்ட போது பட்டத்தின் வாலில் பொருத்தியிருந்த வயர் வீதியால் சென்ற உயர் மின் அழுத்த பிரதான வடத்தில் உரசுண்டுள்ளது. சம்பவ இடத்தில் தூக்கி வீசப்பட்ட இளைஞனை சக நண்பர்கள் காப்பாற்றி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்த்தனர். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட சமயம் அவர் இடைவழியில் உயிரிழந்துள்ளார். சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்தது. (உ)

**யாழில்...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட் டம் யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரிக்கு அருகில் நேற்று மாலை 5 மணிக்கு நடை பெற்றது.

இந்தக் கூட்டம் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டது. எனினும்திடீரென நேற்று வரை கூட்டத்தை ஒத்திவைத்ததாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருந்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உள்ளிட்டவர்கள் இதில் பங்கேற்றனர். (ஐ)

# கல்லுண்டாயில் மலக்கழிவு கொட்டுவதற்குத் தடை!

யாழ்ப்பாணம்–காரைநகர் வீதி, கல்லுண்டாயில் யாழ்ப்பாண மாநகர சபையின் திண்மக் கழிவகற்றல் இடத்தில் மலக்கழிவுகளைக் கொட்டுவதற்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்று தடைவிதித்திள்ளது.

கல்லுண்டாயில் திண்மக் கழிவுகள் கொட்டப்படும் இடத்துக்கு நேரில் சென்று பார்வையிட்ட நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ கட்டளையை மல்லாகம் நீதிவான் நீதிமன்று எதிர்வரும் 21 ஆம் திகதி வழங்கும் என்றும் அவர் அறிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையால் அகற்றப்படும் திண்மக் கழிவுகள் இப் பகுதியில் கொட்டப்பட்டு வருகின்றன.

அத்துடன், மலக்கழிவுகளும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் மருந்துக் கழிவுகளும் இந்த இடத்திலேயே கொட்டப்படுகின்றன.

இதனால் அதனைச் சூழவுள்ள நவாலி, அராலி, ஆனைக்கோட்டைப் பகுதிமக்கள் பாதிக்கப்படுகின்றனர் எனநீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பிரதமருடன் ஐ.தே.க. அமைச்சர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டும்

## கூட்டு எதிரணியின் சி.பி.ரத்நாயக்க கூறுகிறார்

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் வெளியாகியுள்ள அறிக்கைக்குப் பதிலளித்து பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வர முன்னர், அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டுமென கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பிரதமர் மாத்திரமல்ல, ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த ஏனைய அமைச்சர்களும் தமது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# பிரதமர் பதவியிலிருந்து ரணில் விலகத் தேவை ஏதுமேயில்லை

## இப்படிக் கூறுகின்றார் சந்திரிகா

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் தீர்வு காண்பதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும், பிரதமர் நியமித்தவர் திருடினார் என்பதற்காக பிரதமரைக் குற்றம் சாட்ட முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

பிரதமர் நியமித்தவர் திருடினார் என்பதற்கு பிரத மர் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளார்தான். அதற்காக பிரதமர் அவருடன் சேர்ந்து திருடினார் என ஆகிவிடாது. இவ்வாறிருக்கையில், பிரதமர் ஏன் பதவி விலக வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மஹிந்த ராஜபக்ஷவின் காலத்தில் இதுபோன்ற எந்த வொரு விசாரணையும் இடம்பெறவுமில்லை. குற்றவாளிகள் கண்டறியப்படவுமில்லையெனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# அரசியல் நெருக்கடி குறித்து சு.க. மத்திய குழு ஆராயும்!

## அமைச்சர் சரத் அமுனுகம தகவல்

தேசிய அரசாங்கத்தின் நெருக்கடிகள் அதிகரிக்கும் பட்சத்தில் அமைச்சரவை கலைக்கப்பட்டு புதிய அமைச்சரவை உருவாக் கப்படும். கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதியுடன் இது குறித்து கலந்துரையாடப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் அமைச்சருமான கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்தார்.

மத்திய வங்கி பிணைமுறி ஊழல் விவகாரத்தில் குற்றவாளிகளுக்கு உயரிய தண்டனை வழங்கப்படும். அதற்கான சகல அழுத்தங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி கொடுக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் தற்போது அரசியல் தரப்பில் விமர்சனத்திற்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தனது அடுத்த கட்ட நகர்வாக எதனை முன்னெடுக்கும் என வினவிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

**இனி...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி வருமானால் புதிய அரசமைப்பு நிறைவேற முடியாது போகும் என்ற எச்சரிக்கையை விடுத்துள்ளார் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றின்போது குதிரை வண்டிக்கு முன்னால் கரட்டை கட்டித் தொங்கவிட்டு, குதிரையைப் பேய்க் காட்டுவது போல, 'தீர்வு வரும்' என்ற மாயையைக் காட்டி விடயத்தை ஓட்டியாகிவிட்டது. இப்போது உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களிலும் அதே கயிறு. போகின்ற போக்கில் இனிமேல், சங்கக் கடை இயக்குநர் சபைத் தெரிவுக்கு நடக்கும் தேர்தலிலும் தீர்வு சமாச்சாரமே துரும்பு பாக முன்வைக்கப்படும் நிலைமை வந்தாலும் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஏதோ, இப்போதைய நல்லாட்சி அரசு இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குப் பின்னாலும் நின்று, நிலைத்து, நீடிக்கப் போகின்றமை போலவும் –

தள்ளாடும் 'நல்லாட்சி' இனி மேலும் புதிய அரசமைப்பு, அதில் தமிழ் மக்களுக்கு நியாயம் செய்யும் தீர்வு என்று எல்லாவற்றையும் கொண்டுவரும் உறுதியில் இன்னும் இருக்கின்றது என்பது போலவும் –

இப்போதும் கதை விடுகின்றார் சுமந்திரன்.

அவர் கூறியபடி அச்சு ஊடகங்களைத் தூக்கி எறிந்துவிட்டுதனதுவழியில் அவரால்அடிக்கமுடியும். அவருக்கு இருக்கும் பின்னணி அதற்குரிய பலத்தை அவருக்கு தந்திருக்கின்றது என்பதில் எவருக்கும் சந்தேகமில்லை. பிந்தி வந்த கொம்பு முந்தி வந்த காதை மறைப்பது போல ஏமாளிகளான கட்சித் தலைவர், செயலாளர் போன்றோரை மீறி அறிவிப்புக்களை அவர் விடுக்கும் போதே அவரது புஜபல பண வலிமை தெரிந்ததுதான். நினைத்தால் அவரே நாளைக்கு நான்கு அச்சு ஊடகங்களை வடக்கு, கிழக்கில் கட்டவிழத்துத் தன் கைவரிசையைக் காட்ட முடியும். அத்தகைய வலிமைக்கான மூலம் எது என்பதும் மக்களுக்குத் தெரியாததல்ல.

அதுவல்ல விடயம்.

இந்த உள்ளூராட்சித் தேர்தலிலும் கூட்டமைப்புக்கு வாக்களிப்பது அமைதித் தீர்வுக்கு அவசியமானது என்கிறார் சுமந்திரன்.

ஆனால், அவரது நாடாளுமன்ற சகபாடியான சிவசக்தி ஆனந்தனோ பிறிதொரு எச்சரிக்கையை முன்வைக்கின்றார்.

இப்போதும் நீங்கள் கூட்டமைப்புக்கு வாக்களித்தால், அதனைக் காட்டி *'தமிழ் மக்கள் தீர்வுக்காக எங்களோடு சேர்ந்து பயணிப்பதை மீளவும் உறுதிப் படுத்தியிருக்கின்றார்கள். அதைக் குழப்பாதீர்கள். அதைச் செய்வதற்கு மேலும் கால அவகாசம் வழங்குங்கள்!'* – என்று ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை சுட்டிக் காட்டவும் அதன் மூலம் அங்கு இலங்கை மேலும் கால நீடிப்புப் பெற்று தப்பிக் கொள்ளவும் ஆபத்து ஏற்பட்டுவிடும் என்றும் ஆனந்தன் கூறுகின்றார்.

ஆக, தீர்க்கப்படாமல் இழுபடும் தீர்வு விவகாரத்தை வைத்துக் கொண்டு தங்கள் அரசியல் விவகாரத்தைத் தீர்த்துக் கொள்வார்கள் நம் அரசியல்வாதிகள் என்பது மட்டும் நிச்சயம்.

- மின்னல் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பரீட்சிக்கப்படும் தேர்தல் முறைமை

இலங்கைநாடு ஒருபுதிய தேர்தல் முறைமைக்குள் நுழைகின்றது. அந்த முறைமை வெற்றிகரமாக அமையுமா, மக்கள் பிரதிநிதித்துவ நடைமுறையை இது சரிவரப் பிரதிபலிக்குமா என்பவை எதிர்வரும் பெப்ரவரி 10 ஆம் திகதி பரீட்சித்துப் பார்க்கப்படப் போகின்றது.

காலனித்துவ ஆட்சியின் கீழும் பின்னர் சுதந்திர இலங்கையின் முதல் மூன்று தசாப்த காலமும் நாம் தொகுதிவாரிப் பிரதிநிதித்துவ முறையைக் கண்டோம். ஒவ்வொரு தொகுதியிலும் வெற்றி பெறுபவர் பிரதிநிதியாகத் தேர்வு செய்யப்படும் முறையாக அது அமைந்தது. அப்படி வெற்றி பெற்றவரிலும் விட அதிக கூடிய வாக்குகளை ஒட்டுமொத்தமாகப் பலர் சேர்ந்து பெற்றிருந்தாலும் அந்த வாக்குகள் பலரிடையே பிரிந்து சென்றமையால், அந்த வாக்குகளுக்குப் பிரதிநிதித்துவம் கிடைக்காத பின்னடைவை இந்தத்தொகுதிவாரிமுறைமைகொண்டிருப்பதுஅவதானிக்கப்பட்டது.

அதனால், அந்தப் பின்னடைவைச் சரி செய்ய வேண்டும் என்ற நோக்கில் 1978 அரசமைப்போடு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை கொண்டு வரப்பட்டது. ஆனால், தனித்தொகுதிகள் தொடர்பான பிரதிநிதித்துவமும், கவனிப்பும் இல்லாமல்போனமையும், விருப்பு வாக்குத் தெரிவுகளுக்காக நடந்த மோதல்களும், முறைகேடுகளும் அந்தத் தேர்தல் முறைமையிலும் பலத்த குறைபாடுகள் இருந்த பட்டறிவைத் தந்து நின்றன.

அவற்றின் பெறுபேறாக எழுந்த தொகுதிவாரி மற்றும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை கலந்த புதிய நடைமுறை ஒன்று இப்போது முதல் தடவையாக உள்ளூராட்சித் தேர்தலின்போது செயற்பாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன் பயன்பாடு மற்றும் வெற்றிகரம் என்பன பெப்ரவரி இரண்டாம் வாரத்தில் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு முடிவு கிட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தப் புதிய திட்டத்தின் கீழ் இப்போது பதிவு செய்யப்பட்டுள்ள சுமார் ஒன்றரைக் கோடி வாக்காளர்கள் நாட்டின் 341 உள்ளூராட்சி சபைகளுக்கான தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப் போகின்றார்கள்.

இலங்கையின் தேர்தல்கள் வரலாற்றில் இதுவரை பெண்களுக்கு - மகளிருக்கு - சராசரியாக இரண்டு சதவீத இடமே ஒதுக்கப்பட்டு வந்திருக்கின்றமை நமது கடந்த கால அனுபவமாகும்.

அரைவாசிக்கு மேற்பட்ட வாக்காளர்களான பெண்களுக்கு இவ்வாறு மிகமிகக் குறைவான பிரதிநிதித்துவம் அளிக்கும் இந்தத் தேர்தல் முறைமை, பாலினப் பாகுபாட்டின் உச்சம் என வெறுக்கப்பட்ட நிலையில், புதிய முறைமை அறிமுகப்படுத்தப்படுகின்றது.

தற்போது அறிமுகமாகும் புதிய முறைமையின் கீழ் ஒட்டுமொத்தமாக 25 வீதத்துக்கு - அதாவது குறைந்தபட்சம் கால் பங்குக்கு - குறையாத பெண்கள் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் கட்டாயம் அறிமுகமாகின்றமை நல்ல அம்சம்.

அதுவும் பெண்களின் பிரதிநிதித்துவ உயர்ச்சியை - அதிகரிப்பை - தற்போதைய மூன்றாவது மட்டத் தேர்தல்களான உள்ளூராட்சித் தெரிவுகளில் இருந்து நடைமுறைப்படுத்த ஆரம்பித்திருக்கின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும்.

முதலில் உள்ளூராட்சி சபைகள், பின்னர் மாகாண சபைகள், அதன் பின்பு நாடாளுமன்றம் என்று அம்முறைமை விரிவுபடுத்தப்படுவது பொருத்தமானதே.

ஆனால், இப்போது அறிமுகப்படுத்தப்படும் தேர்தல் முறைமை எத்தகையது, வாக்களிப்பு நடைமுறை எவ்வாறு அமையும் என்பன பற்றிய தெளிவுபடுத்தல் இன்னும் மக்களுக்கு - வாக்காளர்களுக்கு - கிட்டவில்லை என்பதுதான் யதார்த்த உண்மை.

தொகுதிவாரி (அல்லது வட்டார) முறை, விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை ஆகியவற்றின் கீழான தெரிவுகள் எப்படி நடைபெறும், வட்டார முறையில் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக அளிக்கப்படும் வாக்கு எப்படி விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்வுக்கும் வழிசெய்கின்றது என்பவை பற்றியெல்லாம் கூட சாதாரண வாக்காளனுக்கு - பொதுமக்களுக்கு - இன்னும் புரிதல் இல்லை என்பதே யதார்த்தமாகும்.

வாக்காளனுக்கு மட்டுமல்ல, இந்தத் தேர்தல் தொடர்பான கடமையில் ஈடுபடப் போகின்ற சுமார் மூன்று லட்சம் அரச ஊழியர்களில் எத்தனை பேருக்கு அது பற்றிய அறிவு இருக்கின்றது, இந்தத் தேர்தல் முறைமையை குழப்பமின்றி செயற்படுத்துவதில் அவர்கள் வெற்றி காண்பார்களா என்பவை எல்லாம் இன்னும் நூறு வீதம் உறுதிப்படுத்தப்படாத அம்சங்களாக - தெளிவற்ற நிலையிலேயே - இருக்கின்றன என்பதும் மறுக்கக்கூடிய தொன்றல்ல.

இலங்கையின் தேர்தல் வரலாற்றில் தேசிய மட்டத் தேர்தல் ஒன்று சுயாதீன தேர்தல் ஆணையத்தினால் நடத்தப்படும் வரலாற்றுப் பெருமையையும் கூட இந்தத் தேர்தலே பெறுகின்றது.

மூன்று தேர்தல் ஆணையர்களைக் கொண்ட சுயாதீனதேர்தல் ஆணையம் இந்தத் தேர்தலை எப்படி ஒப்பேற்றி முடிக்கப் போகின்றது என்பது கூர்ந்து நோக்கப்படுகின்றது.

இந்தத் தேர்தலை ஒட்டி, ஊடகக் கலாசாரம் - ஊடகச் செயற்பாடுகள், ஒழுக்க நடைமுறை - சரிவரப் பேணப்படுகின்றதா என்பதைத் தேர்தல் ஆணையத்துக்கு உதவியாக 'செய்தி ஊடகங்களுக்கான நிரந்தரப் பிரதிநிதிக்குழு' என்ற அமைப்பும் அவதானிக்க இருப்பதாகத் தெரிகின்றது.

இவை எல்லாம் சேர்ந்து சிறந்த ஒரு தேர்தல் முறைமையை இங்கு செயலுருப் பெற வைக்குமா என்பது பெப்ரவரி இரண்டாம், மூன்றாம் வாரத்தில் தெரியவரும் என எதிர்பார்க்கலாம்.

# பாக். கட்டளை அதிகாரி இலங்கைக்கு விஜயம்



கொழும்பு, ஜன. 08

இலங்கை இராணுவத்தின் அழைப்பையேற்று பாகிஸ்தான் 'ஸ்கூல் ஒவ் லாஜிஸ்டிக்ஸ்' கட்டளை அதிகாரியான பிரிகேடியர் ஹசிப் சபார் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகள் இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்த இந்த அதிகாரிகளை இலங்கை இராணுவத்தின் கேணல் ரஞ்சன் ஜயசேகர வரவேற்றார்.

இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் பிரதிநிதிகள், கோட்பாட்டின் அபிவிருத்திக்கான, விநியோகச்சடங்குகள், இரு தரப்பு இராணுவ ஒத்துழைப்பு மற்றும் அவர்களது இலங்கை இராணுவ ஒத்துழைப்புடன் அக்கறை கொண்டுள்ள ஏனைய விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர்.

இலங்கை இராணுவத்தின் தர்க்கரீதியான கொள்கைகளின் ஒட்டுமொத்தத் தகவல்களைச் சேகரிக்கும் மற்றும் ஒருவருக்கொருவர் நுணுக்கங்களை பரிமாறிக்கொள்ளும் சாத்தியங்களை ஆராயும் நோக்கமாகவும் இந்த விஜயம் அமைந்துள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வவுனியாவில் சிறுமி துஷ்பிரயோகம்; 17 வயதுப் பாடசாலை மாணவன் கைது!

வவுனியா - ஈச்சங்குளம் பகுதியில் 13 வயதுடைய பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தியவர் எனக் கருதப்படும் 17 வயதுடைய சிறுவன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளான்.

ஈச்சங்குளம் பகுதியில் வசித்து வரும் 13 வயதுடைய பாடசாலை மாணவியும் மல்லாவியைச் சேர்ந்த 17 வயதுடைய சிறுவனும் கடந்த ஒரு வருடங்களாகக் காதலித்துள்ளனர்.

இந்த நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை இந்த மாணவியின் வீட்டில் ஏற்பட்ட சிறு தகராறு காரணமாக மாணவி வீட்டை விட்டு வெளியேறி தனது காதலனுடன் சென்றுள்ளார்.

மாணவியின் பெற்றோர் மாலை வரை அவரைத் தேடியும் கிடைக்காததால் ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் இந்தச் சம்பவத்தை தெரிவித்து முறைப்பாடொன்றை மேற்கொண்டனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஈச்சங்குளம் பொலிஸார், சிறுவனையும் மாணவியையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் போது இந்தப் பாடசாலை மாணவியை 17 வயதுடைய சிறுவன் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது.

அதனையடுத்து இந்தச் சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் சிறுவன் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போது சிறுவனை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஐ.தே.க. வேட்பாளரின் காரியாலயம் அடையாளம் தெரியாதோரால் சேதம்!



கொழும்பு, ஜன. 08

திருகோணமலை - கந்தளாய், பேராறு பகுதியில் ஐ.தே.க. வேட்பாளர் ஒருவரின் கிளைக் காரியாலயம் அடையாளம் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது எனக் கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சேதமாக்கப்பட்ட காரியாலயம் ஐ.தே.கவின் பேராறு கிழக்கு பத்தாம் வட்டார வேட்பாளர் என்.எம்.கே. சுபார்கானின் கிளைக் காரியாலயம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(க)

# ஐ.தே.கவை அழித்தொழிக்க முயற்சிக்கின்றார் ஜனாதிபதி

## ஜே.வி.பியின் பிமல் தெரிவிப்பு

மத்திய வங்கி முறி மோசடி தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கையின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியை இல்லாதொழிப்பதற்கே ஜனாதிபதி எதிர்பார்த்துள்ளார் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை முன்னிட்டு ஹட்டன் - திக்ஓயா நகர சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் கூறினார்.

இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பிரகாரம், சம்பந்தப்பட்ட குற்றவாளிகளிடமிருந்து நிதியை மீண்டும் அறவிடுவதற்கு நாடாளுமன்றத்தில் புதிய சட்டவரைவு ஒன்றை அரசு கொண்டு வருமாயின் மக்கள் விடுதலை முன்னணி அதற்கு ஆதரவாக வாக்களிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இம்முறை தேர்தலிலும் மஹிந்த ராஜபக்ஷவுடன் கூடித் தேர்தலில் போட்டியிடுபவர்கள், பழைய திருடர்கள் கூட்டமே எனவும் அவர் இதன் போது மேலும் சுட்டிக்காட்டினார்.

(ஐ)

### நாளை

09.01.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : அத்தம் மு.ப. 7.21வரை
திதி : அட்டமி மு.இ.09.48 வரை
சுபநேரம் : 11.02 – 12.32 வரை
இராகுகாலம்: 03.32 – 05.02 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வில் பிரித்தானியாவின் இளவரசர் எட்வேர்ட்



கொழும்பு, ஜன. 08

இலங்கையின் 70 ஆவது சுதந்திர நாள் கொண்டாட்டங்களில் பிரதம விருந்தினரான பிரித்தானியாவின் இளவரசர் எட்வேர்ட் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 70 ஆவது சுதந்திர நாள் நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதி நடைபெறவுள்ளன. காலிமுகத்திடலில் சுதந்திர நாள் பிரதான அணிவகுப்பு நிகழ்வுகள்இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராக, பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் மற்றும் எடின்பரோ கோமகன் இளவரசர் பிலிப் ஆகியோரின் இளைய மகனான இளவரசர் எட்வேர்ட் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது என இலங்கை உள்துறை அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக இளவரசர் எட்வேர்ட்டுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் அந்த அழைப்பை ஏற்றுக் கொண்டுள்ளார் என்றும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்.

இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் 50 ஆவது சுதந்திர நாள் 1998 ஆம் ஆண்டு கொண்டாடப்பட்ட போது, பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக, அவரது மூத்த மகன் இளவரசர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராகப் பங்கேற்றிருந்தார்.

அதேவேளை, தாய்லாந்து, ஜப்பான் ஆகிய நாடுகளின் அரச குடும்பத்தினருக்கும் இலங்கையின் சுதந்திர நாள் நிகழ்வுகளில் பங்கேற்குமாறு அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன.

400 ஆண்டுகள் அந்நியர் ஆதிக்கத்தில்இருந்தஇலங்கை, 150 ஆண்டுகள் பிரித்தானியரின் ஆதிக்கத்தில் இருந்து, 1948 ஆம் ஆண்டு விடுதலை பெற்றது என்பது குறிப்பிடத் தக்கது.

(க)

# தேர்தலில் போட்டியிட நிர்வாணப் 'போஸ்'!



## நடிகை மதுஷா அதிர்ச்சித் தகவல்

கொழும்பு, ஜன. 08

மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான இலங்கை மக்கள் முன்னணி கட்சியின் கீழ் போட்டியிட வாய்ப்புக் கேட்ட நடிகை ஒருவரிடம், அதற்கு பாலியல் ரீதியாக லஞ்சம் கேட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரபல நடிகை மதுஷா ராமசிங்க, நடிப்புத் தொழிலைக் கைகழுவிவிட்டு அரசியலில் இறங்க விரும்பினார். அதன்படி, மஹிந்த ராஜபக்ஷவின் கட்சியில் இணைந்து கொண்ட அவர், உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட நினைத்தார்.

ஏற்கனவே, கட்சி நடவடிக்கைகளில் மும்முரமாகப் பங்கேற்ற அவர், உள்ளூராட்சித் தேர்தலில் கட்டாயம்போட்டியிடவேண்டும் என்று விரும்பினார்.

இதற்காக அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினரும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு மிக நெருக்கமான வருமான ஒருவரை அணுகினேன் என்றும் அதற்கு அவர், தன் முன் நிர்வாணமாகக் காட்சி தந்தால் வாய்ப்புத் தருவேன் என்றும் கூறினார் என மதுஷா கூறியுள்ளார்.

இது குறித்து மஹிந்த ராஜபக்ஷவிடம் தாம் முறைப்பாடு தெரிவித்தபோதும் அதை அவர் லட்சியம் செய்யாதமை கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்றும் மதுஷா தெரிவித்துள்ளார்.

இந்தத் தகவலை ஆங்கில இணைய ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ளது.

(க)

# நுவரெலியாவில் பனிப் பொழிவு!



கொழும்பு, ஜன. 08

நாட்டில் பொதுவாக வறட்சியான காலநிலையே காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இரவு மற்றும் காலை வேளைகளில் நாட்டில் பெரும்பாலான பிரதேசங்களில் குளிரான காலநிலையே காணப்படும்.

பொதுவாக மேற்கு, சப்பிரகமுவ மத்திய மாகாணங்களில் காலை வேளையில் பனி மூட்டம் காணப்படும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு, கிழக்கில் தற்பொழுது குளிருடனான காலநிலை காணப்படுகின்றது. இதற்கு காரணம் வளிமண்டலத்தில் காணப்படும் ஈரப்பதனே ஆகும்.

இந்த காலநிலை பெப்ரவரி மாதம் வரை நீடிக்கக்கூடிய சாத்தியம் இருக்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக வடக்குக் கிழக்கில் இக்காலப் பகுதியில் பனி காணப்படுவது வழமை.

இதன் காரணமாக எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் சுமார் ஒரு வார காலத்திற்கு குறைந்த அளவான மழை வீழ்ச்சியையே எதிர்பார்க்க முடியும்.

மழையின் பின்னரும் பனியுடனான காலநிலை காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று அதிகாலையும் நுவரெலியாவின் உள்ள குதிரை மைதானம் பனியால் படர்ந்து காணப்பட்டது. நுவரெலியாவில் 4 செல்சியஸ்ஸாக வெப்பநிலை காணப்பட்டது.நுவரெலியாவின் பல இடங்களில் இவ்வாறு தரையில் பனி படர்ந்திருந்தது என்றும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

## கணினி கற்கைநெறி; விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.08

தீவகக் கல்வி வலயத்தின் கணினி வள நிலையத்தில் MS Office, Computer Application Assistant (CAA - NVQ Level-3) கற்கைநெறிகள் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன.

இதற்கான பதிவுகளை மேற்கொள்ள விரும்புவோர் நாளைமறுதினம் 10 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் வேலணை சரஸ்வதி வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள கணினி வள நிலையத்தில் மேற்கொள்ளுமாறு தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ஆ.இளங்கோ அறிவித்துள்ளார்.

(இ)

# லத்விய ஜனாதிபதி இலங்கைக்கு விஜயம்



கொழும்பு, ஜன. 08

பத்து நாள்கள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு லத்விய ஜனாதிபதி ரேமண்ட்ஸ் வேஜனிஸ் தனது பாரியாருடன் இலங்கை வந்தடைந்தார்.

இலங்கை வந்துள்ள அவரும் அவருடைய குழுவினரும் அரசு மற்றும் பல முக்கியஸ்தர்களைச் சந்திக்கவுள்ளனர்.

லத்விய ஜனாதிபதி மற்றும் அவரது குழுவினர் எதிர்வரும் பதினாறாம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து பல இடங்களுக்கும் விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# மொரிஸியஸ் நாட்டின் முன்னாள் தூதுவர் ஈஸ்வரன் காலமானார்!



கொழும்பு, ஜன.08

மொரிஸியஸ் நாட்டின் முன்னாள் தூதுவர் ஈஸ்வரன் காலமானார்.

இலங்கைக்கான மொரிஸியஸ் நாட்டின் முன்னாள் தூதுவரும், பிரபல தொழிலதிபரும் கம்பன் கழக முன்னாள் தலைவருமான தேசபந்து தெய்வநாயகம்பிள்ளை ஈஸ்வரன் நேற்று முன்தினம் காலமானார்.

இறக்கும் போது 76 வயது. சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் காலமானார்.

இவர் பிரபல சமய, சமூக சேவையாளராவார். கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயத்தின் அறங்காவலராகவும் பணியாற்றி வந்தார்.

இவரது பூதவுடல் இலக்கம் 133, புதுச்செட்டித்தெரு, கொழும்பு 13 என்ற முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் இன்று மாலை இடம்பெறவுள்ளன.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# திருமலையில் நீதி கோரி ஆர்ப்பாட்டம்





திருகோணமலை,ஜன.08

சர்வதேச அநாதைகள் தினத்தை முன்னிட்டு, திருகோணமலை மாவட்டத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உறவுகள் இணைந்து நேற்றுமுன்தினம் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்ஒன்றை முன்னெடுத்தனர்.

மூதூர், பாரதிபுரம் சிவன் கோயிலுக்கு முன்னால் அமைதியான முறையில் இந்தக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

யுத்தத்தால் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கிடைக்க வேண்டும் எனக் கோரியும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அரசாங்கம் வாழ்வாதார உதவிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் இதன்போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

(ப)

## யானை தாக்கி விவசாயி சாவு

ஏறாவூர்,ஜன.08

ஏறாவூர்ப்பற்று - வெள்ளைக்கல்மலைப் பகுதியில் நேற்று அதிகாலை காட்டு யானைத் தாக்குதலில் விவசாயி ஒருவர் கொல்லப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தில் வந்தாறுமூலை பிரதான வீதியை அண்டி வாழும் முத்துலிங்கம் சுந்தரலிங்கம் (வயது-51) என்பவரே கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.

இவர் மாடுகளைப் பராமரித்துக் கொண்டு வாடியில் இருந்தபோது காடுகளுக்குள் இருந்து வந்த யானைகளில் ஒன்று அவரை தாக்கியுள்ளது. இந்த நிலையில் அவர் அந்த இடத்திலேயே பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அயல் வாடிகளில் இருந்தவர்களுக்கு தெரிய வந்ததையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

(ப)

## பாசிக்குடாவில் நட்சத்திர விடுதிகள்; 543 குடும்பங்கள் வெளியேற்றம்




மட்டக்களப்பு,ஜன.08

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் மட்டக்களப்புப் பாசிக்குடாப் பகுதியிலிருந்து 543 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன எனத் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு - உறுகாமம் பகுதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் நேற்றுமுன்தினம் நாடாளுமன்ற உறுப்பினர் சதாசிவம் வியாழேந்திரனால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தென்பகுதி கோடீஸ்வரர்கள் மற்றும் அரசியல்வாதிகளால் பாசிக்குடாவில் நிர்மாணிக்கப்பட்ட நட்சத்திர விடுதிகள் காரணமாகவே 543 குடும்பங்கள் வெளியேற்றப்பட்டுள்ளன. ஒரு சமூகத்துடைய இருப்பைத் தீர்மானிப்பது நிலம் எனவும் இந்த நிலத்திற்காகவே ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ப)

## ஆற்றில் இருந்து சடலம் மீட்பு!

கந்தளாய்,ஜன.08

கந்தளாய்-பேராற்றுவெளி, எரிக்கிலம் காடு பாம் வாய்க்காலில் குளித்த ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்தச் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது எனக் கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் தனிமையில் லொறி ஒன்றில் வந்து, வீதியோரத்தில் லொறியை நிறுத்தி விட்டு எரிக்கிலம் காடு பாம் வாய்க்காலில் குளித்துக் கொண்டிருந்த போது உயிரிழந்திருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகித்துள்ளனர்.

அத்துடன் உயிரிழந்தவர், மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 68வயதுடைய சந்திரரத்ன என இனங்காணப்பட்டுள்ளார் எனவும் கந்தளாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ப)

## கிழக்குத் தமிழர்களின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம்

மட்டக்களப்பு,ஜன.08

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களின் தற்போதைய நிலை தொடர்பாகவும் எதிர்கால அபிவிருத்தி மற்றும் இருப்புக்கள் பற்றியும் ஆராயும் விசேட கூட்டம் ஒன்று மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சட்டத்தரணி த.சிவநாதன், சிரேஷ்ட ஆய்வாளர் செங்கதிரோன், த.கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் தலைமையில் உப்போடை துளசிமண்டபத்தில் இந்த விசேட கூட்டம் இடம்பெற்றது.

யுத்தத்தின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

கடந்த காலத்தில் தமிழர்கள் எதிர்நோக்கிய காணி மற்றும் பொருளாதார அபிவிருத்தி, அரசியல் செயற்பாடுகள் என்பவற்றையும் எதிர்காலத்தில் முன்கொண்டு செல்லவேண்டிய பணிகள் தொடர்பிலும் இதன்போது ஆராயப்பட்டது.

(ப)

# ஆசிரியர்கள்,நிறைவான விடயங்களை பல்துறை சார்ந்து கற்றுத் தேறவேண்டும்




மட்டக்களப்பு,ஜன.08

ஆசிரியர்கள்,நிறைவான விடயங்களைப் பல்துறை சார்ந்து கற்றுத் தேர்ச்சி பெற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான மாணிக்கம் உதயகுமார் தெரிவித்துள்ளார்.

கணித விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களுக்கான திசைமுகப்படுத்தல் பயிற்சி நிறைவில் ஆசிரியர்களுக்குரிய பயிற்சி சான்றிதழ் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு,மட்டு தாழங்குடா தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி எஸ்.ராஜேந்திரன் தலைமையில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

தகவல் தொழிநுட்ப யுகத்தில் உலகம் கிராமமான நிலையில், ஆசிரியர்கள் நிறைவான விடயங்களைப் பல்துறை சார்ந்து கற்றுத் தேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்.

மாணவர்களுக்கான பல தரப்பட்ட அறிவுப் பசியையும் தேவைகளையும் நிறைவேற்றுபவர்களாக ஒவ்வோர் ஆசிரியர்களும் தங்களை தகவமைத்துக் கொள்ளவேண்டும்.

குழந்தைகளினுடைய நாட்டினுடைய எதிர்காலத்தை அரசாங்கம் ஆசிரியர்களிடமே கையளித்திருக்கின்றது.

புனிதத்துவமான ஆசிரியர் தொழிலின்ஊடாக ஒவ்வொரு குழந்தையும் சிறந்த சமூகப் பிரஜைகளாக உருவாக்கும் பொறுப்பு உங்களிடம் இருக்கின்றமையால் பொறுப்புடனும் பொறுமையுடனும் ஒவ்வொரு செயற்பாடுகளையும் சரியான முறையில் முன்னெடுப்பவர்களாக ஒவ்வோர் ஆசான்களும் இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியாவின் பொருளாதாரக் கேந்திரமாக இலங்கையை மாற்ற ஜப்பான் உதவும்

கொழும்பு, ஜன. 08

இலங்கையை ஆசியாவின் பொருளாதாரக் கேந்திரமாக மாற்றுவதற்கு ஜப்பான் உதவும் என்று ஜப்பானிய வெளி விவகார அமைச்சர் தாரோ கோனோ தெரிவித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை கடந்த வெள்ளிக்கிழமை அலரி மாளிகையில் சந்தித்துப் பேச்சு நடத்திய போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார, அரசியல் உறவுகளை மேலும் பலப்படுத்தும் நம்பிக்கையுடனேயே தாம் இலங்கைக்கான பயணத்தை மேற்கொண்டிருக்கின்றோம் என இந்தச் சந்திப்பின் போது ஜப்பானிய வெளி விவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது கருத்து வெளியிட்ட பிரதமர் ரணில் விக்கிரமசிங்க-

கொழும்பு மற்றும் திருகோணமலை துறைமுகங்களின் அபிருத்தி, கண்டி நகர விரிவாக்கம், கட்டுநாயக்க விமான நிலைய விரிவாக்கம், மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டம் ஆகியன வற்றில் ஜப்பானின் முதலீடுகள் முக்கியத்துவமானது என்று குறிப்பிட்டுள்ளார்.



மிதக்கும் திரவ எரிவாயு மின் நிலையத் திட்டம் தொடர்பாக இந்த மாதம் மூன்றாவது வாரத்தில் ஜப்பானுடன் உடன்பாடு கையெழுத்திடப்படும் என்றும் பிரதமர் ரணில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடன் இணைந்து கூட்டு முயற்சியாக, 500 மெகாவாட் மிதக்கும் திரவ எரிவாயு மின்திட்டத்தையும், எரிவாயு விநியோக குழாய் அமைப்பையும் நிறுவ ஜப்பான் இணங்கியுள்ளது.

அத்துடன், ஜப்பானும் இலங்கையும் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்புடன் செயற்பட முடியும் என்றும், எதிர் காலத்தில் இலங்கையுடன் இன்னும் அதிகமாக நெருக்கத்துடன் பணியாற்ற முடியும் என்று நம்புகிறோம் என ஜப்பானிய வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு!



கொழும்பு, ஜன. 08

இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

கடந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூன்று தசம் இரண்டு சதவீதத்தால் அதிகரித்துள்ளது.இந்தக் காலப்பகுதியில் 21 லட்சத்து 16 ஆயிரத்து 407 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

இலங்கையின் சுற்றுலாத் துறையின் சவால்மிக்க காலப் பகுதியாகக் கருதப்படும் 2017 ஆம் ஆண்டில் இந்த அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

## அரசின் தவறைச் சுட்டிக் காட்ட நல்லதொரு வாய்ப்பு - கோட்டா

கொழும்பு, ஜன. 08

நல்லாட்சி அரசின் மந்தமான செயற்பாடு குறித்த அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் மக்கள் எதிர்வரும் தேர்தலைப் பயன்படுத்தலாம் என முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கை மக்கள் முன்னணி ஒழுங்கு செய்திருந்த கூட்டம் ஒன்றில், வெளிநாட்டில் இருந்தவாறே 'ஸ்கைப்' மூலம் இணைந்து கொண்ட அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



தற்போதைய அரசு நாட்டின் அபிவிருத்திகுறித்துக்கவனம்செலுத்தாமல் தமது அரசியல் நோக்கங்களை அடைவதில் மட்டுமே கரிசனை காட்டிவருகிறது.

உலகளாவில் இந்த அரசு வெற்றி பெற்றதாகத் தம் பட்டம் அடித்துக் கொள்கிறது. நமது நாட்டுக்குத் தேவையானவாறு உலக நாடுகளின் உதவிகளைப் பயன்படுத்திக் கொள்வதுதான் உலகளாவிய வெற்றிஎன்றுகூறமுடியும். ஆனால், நடப்பது என்ன? உலக நாடுகளின் தாளத்துக்கு இந்த அரசு ஆடிக் கொண்டிருக்கிறது.

இந்த நிலையில்தான், உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறவுள்ளன. அரசின் தவறான போக்கைச் சுட்டிக் காட்டுவதற்கு மக்கள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

## விபத்தில் இளம் தம்பதி மரணம்; கைக்குழந்தை படுகாயம்!

கொழும்பு, ஜன. 08

தம்புத்தேகமவில் கார் - முச்சக்கரவண்டி மோதிக்கொண்ட விபத்தில் இளம் கணவன்-மனைவி பலியாகினர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை சுமார் நான்கு மணியளவில் இடம் பெற்றது.

அனுராதபுரத்தில் இருந்து குருநாகல் நோக்கி வந்து கொண்டிருந்த காருடன், எதிர்த்திசையில் பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கர வண்டி மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில், முச்சக்கரவண்டியில் பயணித்திருந்த கணவன், மனைவி, அவர்களது கைக்குழந்தை மற்றும் ஒருவர் ஆகிய நால்வரும் படுகாயங்களுக்கு உள்ளாகினர்.

சம்பவ இடத்தில் இருந்த மக்கள் உடனடியாக அவர்களை அனுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர்.எனினும் 28 வயதான கணவனும் 23 வயதேயான மனைவியும் பரிதாபமாக மரணத்தைத் தழுவினர். கைது செய்யப்பட்டுள்ள கார் சாரதி நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (க)

## போதைப்பொருள்களுடன் 13 இளைஞர் பொலிஸ் சோதனைச் சாவடியில் சிக்கினர்



கொழும்பு, ஜன. 08

சிவனொளிபாதமலைக்கு வழிபடுவதற்கு வந்த 13 இளைஞர்கள் நேற்று முன்தினம் மாலை தியகல பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து ஒரு தொகை போதைப் பொருளுடன் ஹட்டன் குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் படி, மோப்ப நாய்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது, ஒரு தொகை கேரளக் கஞ்சா, போதையை ஏற்படுத்தக் கூடிய ஒரு தொகை வில்லைகள், சட்டவிரோதமான சிகரட்டுக்கள் மற்றும் மதன மோதகம் போன்ற போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என ஹட்டன் குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.



சந்தேகநபர்கள், 20 தொடக்கம் 25 வயதையுடையவர்கள் எனவும், போகந்தர, [illegible], கண்டி, கம்பளை மற்றும் [illegible] ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும், பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட 13 பேரையும் இன்று ஹட்டன் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிவனொளிபாதமலைக்கு வருகின்ற பக்தர்களுக்கு இதுபோன்ற போதைப் பொருள்களைக் கொண்டு வரவேண்டாம் எனவும், இதுபோன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவேரைப் பிடிக்க, ஹட்டன் ரயில் நிலையம், கினிகத்தேன, நோட்டன் பிரிஜ், வட்டவலை, நோர்வூட், நல்லதண்ணி, மஸ்கெலியா போன்ற பிரதேசங்களில் விசேட பொலிஸ் உத்தியோகத்தர்கள் சேவையில் உள்ளனர் எனவும் ஹட்டன் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பொருளாதாரப் பேரவையுடன் இலங்கை அரசு முக்கிய பேச்சு

இலங்கைக்கான வர்த்தக உதவிகள் மற்றும் எதிர்கால உற்பத்திகள் என்பன தொடர்பாக உலகப் பொருளாதார பேரவையுடன் இலங்கை கலந்துரையாடியுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இந்தத் தகவலை ஜெனிவாவில் உள்ள ஐக்கிய நாடுகளுக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பணியகம் வெளியிட்டுள்ளது.

உலகப் பொருளாதாரப் பேரவையின் முக்கியஸ்தர்களுக்கும், சர்வதேச வர்த்தகத்துறை அமைச்சர் மலிக் சமரவிக்ரமவுக்கும் இடையிலான சந்திப்பின்போதே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றிருக்கிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது, இலங்கைக்கான வர்த்தக உதவிகள், எதிர்கால உற்பத்திகள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான கூட்டு முதலீடுகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தினசரி ராசி பலன் (08.01.2018)

*2017ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மார்கழித் திங்கள் 24ஆம் நாள் திங்கட்கிழமை ஸப்தமி பகல்3.46மணி வரை பின்னர் அஷ்டமி நட்சத்திரம்-அத்தம் பி.இ.1.45மணி வரை பின்னர் சித்திரை. சித்தயோகம் பி.இ.1.45மணி வரை பின்னர் அசுபயோகம்.*

**ராகுகாலம்** - *காலை7.57மணி முதல் 9.23 மணி வரை*

**சுபநேரம்** - *பகல் 12.33மணி முதல் 2.05மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *மார்கழி மாத ஸப்தமி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *அத்தம்*

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** – ஆக்கபூர்வமான வாரம். பணப்புழக்கம் சரளமாகப் புழங்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். புதிய தொழில் வாய்ப்புகள் அமையும். வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும்.

**ரிஷபம்** – அனுகூலமான நாள். வருமானம் வளமானதாக இருக்கும். சகோதரர்கள் மூலம் சிலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். பெண்களுக்கு அழகுசாதனப்பொருள்கள் விற்பனையில் முன்னேற்றம் உண்டாகும்.

**மிதுனம்** – சஞ்சலமான நாள். மனக்கவலை,யோசனை அதிகரிக்கும். தனவரவு குறையும். உடலில் சோர்வு, அசதி உண்டாகும். பிள்ளைகள் சொல் கேளாமல் அடம்பிடிப்பார்கள். பெண்களுக்குப் பொறுப்புக்கள் அதிகரிக்கும்.

**கடகம்** – சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சிரமமாக இருக்கும். மன அழுத்தம் உண்டாகும். தொழிலில் சங்கடம் உண்டாகும். குடும்பத்தில் புதிய செலவுகள் உண்டாகும்.

**சிம்மம்** – உயர்வான நாள். பணம் பல வழிகளிலும் வந்து சேரும். குடும்பத்தில் ஒற்றுமை,மகிழ்ச்சி மேலோங்கும். சகோதர வழியில் உதவிகள் கிடைக்கும். உத்தியோக உயர்வு கிடைக்கும்.

**கன்னி** – மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். திருமண காரியங் கள் ஒப்பேறும்.

**துலாம்** – யோசனையான நாள். பணம் தட்டுப்பாடாக இருக்கும். குடும்பச்செலவுகள் அதிகரிக்கும். கருத்துவேறுபாடு உண்டாகும். தாய்,தந்தையரின் உடல்நிலை பாதிப்படையும். சுயதொழிலில் ஆதாயம் கிடைக்கும்.

**விருச்சிகம்** – இன்பமான நாள். பொருளாதாரம் மேம்படும். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். வெளிநாட்டு உறவுகளிடமிருந்து விலையுயர்ந்த பரிசுப்பொருள்கள் வந்து சேரும். சகோதர வழி உதவி கிடைக்கும்.

**தனுசு** – விருத்தியான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் நெருக்கம்,பாசம் அதிகரிக்கும். வியாபாரம் நல்ல விருத்தி அடையும். விவசாயத்தில் விளைச்சல் அதிகரிக்கும்.

**மகரம்** – சுபீட்சமான நாள். பொருளாதாரம் வளர்ச்சி அடையும். வீட்டில் ஒற்றுமை,மகிழ்ச்சி அதிகரித்து சுபீட்சம் உண்டாகும். உறவினர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ள நேரும்.

**கும்பம்** – சலனம் மிகுந்த நாள். பணவரவு குறையும். குடும்பத்தில் குழப்பநிலை காணப்படும். எண்ணிய காரியங்கள் கைகூடாமற் போகும். தொழிலில் அடுத்தவர்களால் பிரச்சினைகள் உண்டாகும்.

**மீனம்** – மத்திமமான நாள். வரவும்,செலவும் சமமாக இருக்கும். குடும்பத்தில் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்துப் போவது நல்லது. பிரயாணத்தின் போது கவனம் தேவை.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3ஆம்.4ஆம் பாதங்கள் சதயம்.பூரட்டாதி 1ஆம்.2ஆம்.3ஆம் பாதங்களில் பிறந்தோர் நற்கருமங்களில் ஈடுபடுவதை தவிர்க்கவும்.

# சரலா அத்துலத்முதலி ஜனாதிபதியுடன் இணைவு!

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி மற்றும் ஸ்ரீமத் அத்துலத்முதலி ஆகியோரின் புதல்வியான சரலா அத்துலத்முதலி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துள்ளார்.

இதன்போது அவர், சுதந்திர மற்றும் ஜனநாயக சமூகம் ஒன்றை எதிர்பார்த்துத் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காக விரிவானதொரு பணியை முன்னெடுத்த தனது தந்தையின் அரசியல் பயணத்தை நினைவுகூர்ந்த சரலா அத்துலத்முதலி இன்று இலங்கையில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்தி உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு தேசமாக நாட்டை முன் கொண்டு செல்வதற்கு ஜனாதிபதி மேற்கொண்டு வரும் பணிகளைப் பாராட்டினார்.

மேலும், ஜனாதிபதி நாட்டுக்காக முன்னெடுத்துள்ள நிகழ்ச்சித் திட்டங்களுக்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆதரவு வழங்கத் தான் தயார் எனத் தெரிவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு கூறியுள்ளது.

இலங்கையின் முன்னாள் வர்த்தக, தேசிய பாதுகாப்பு, விவசாயத்துறை அமைச்சராக இருந்த லலித் அத்துலத் முதலி, 1977 ஆம் ஆண்டு தொடக்கம் 1988 ஆம் ஆண்டு வரையிலான ஜே. ஆர்.ஜெயவர்த்தன அரசில் முக்கிய அமைச்சராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்திய அவர்,பின்னர் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவராகச் செயற்பட்டு வந்தமையுடன், மக்கள் மத்தியில் மகாபொல புலமைப்பரிசில் முறைமையை அறிமுகப்படுத்தியதன் மூலம் பிரபலமானார்.

தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த வேளையில் வடக்கு, கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பெரும் இராணுவ நடவடிக்கைகளுக்கு உத்தரவிட்டவர் அத்துலத்முதலி. இந்த நடவடிக்கைகளால் தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. 1993 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இவர் உயிரிழந்தார்.

## யோகா தியான கற்கை; பூர்த்தி செய்தோருக்கு சான்றிதழ் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 08

இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தப்பட்டு வருகின்ற யோகா தியான கற்கைநெறியைக் கடந்த ஆண்டுகளில் பூர்த்தி செய்தவர்களுக்கான சான்றிதழ்கள் திணைக்களத்தால் வழங்கப்படவுள்ளன.

இவர்களுக்கான பிரயோக மதிப்பீட்டுத் தேர்வு எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளது. அன்றைய தினம் காலை 6.30 - 7.30 மணிவரை ஆண்களுக்கும் காலை 7.30 - 8.30 மணி வரை பெண்களுக்கும் இம் மதிப்பீட்டுத் தேர்வு நடைபெறவிருப்பதால் சான்றிதழ்களைப் பெற விரும்புவோர் அன்றைய தினம் நடைபெறும் பிரயோக மதிப்பீட்டுத் தேர்வுக்குச் சமுகம் தந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு திணைக்களம் கேட்டுள்ளது.

மேலதிக தகவல்களை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## இலங்கைக்கு மட்டுமே இந்திய அரசு அழைப்பு

இந்தியாவில் நடைபெறவுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்தின நிகழ்வுகளில் பங்கேற்க சார்க் உறுப்பு நாடுகளில் இலங்கைக்கு மாத்திரமே அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை நடை பெறவுள்ளது.

இந்த நிகழ்வில், பிரிட்டன், அமெரிக்கா, தென்னாபிரிக்கா மற்றும் கனடா உள்ளிட்ட 23 நாடுகளைச் சேர்ந்த வெளிநாடுவாழ் இந்திய வம்சாவளி நாடாளுமன்ற உறுப்பினர்கள், மேயர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

வெளிநாடு வாழ் இந்தியர் தினத்தில். இந்திய வம்சாவழியினருக்கான நாடாளுமன்ற மாநாடொன்று நடைபெறவுள்ள நிலையில், அதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆரம்ப உரையாற்றவுள்ளார்.

மகாத்மா காந்தி, தென்னாபிரிக்காவிலிருந்து மும்பை வந்து சேர்ந்த நாளான ஜனவரி 9ஆம் திகதி, இந்தியாவைத் தவிர்த்த பிற நாடுகளில் வாழும் இந்தியர்களின் நினைவாக இத்தினம் ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய் காலை 8 மணியிலிருந்து மாலை 5மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** - வேலணைச் சந்தியிலிருந்து துறையூர் வரை, மடத்துவெளி, வல்லான், ஆலடிச் சந்தி, புங்குடுதீவு, இறுப்பிட்டி, குறிகட்டுவான், புங்குடுதீவு கடற்படை முகாம் -

**வவுனியா பிரதேசத்தில்** - கணேசபுரம் கிராமம் ஆகிய பிரதேசங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

## பொதுக்கூட்டம்

சங்கானைபிரதேசசெயலக பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கானை பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

நிதியத்தின் தலைவர் ந.சிவரஞ்சன் தலைமையில் இடம்பெறவுள்ள இப்பொதுக் கூட்டத்தில் சங்கானைபிரதேச செயலர் திருமதி பிரேமினி பொன்னம்பலம் பிரதம விருந்தினராகவும் உதவிப் பிரதேச செயலர்திருமதிகி.செந்தூரன், பிரதேச செயலக கணக்காளர் ஞா.லோகநாதன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

## கணக்காளர் சேவை தரம் III பரீட்சை

இலங்கை கணக்காளர் சேவையில் தரம் மூன்றுக்கு ஆள்களைச்சேர்த்துக்கொள்வதற்கான வரையறுக்கப்பட்ட பகிரங்கப் போட்டிப் பரீட்சை இம்மாதம் 27 ஆம், 28 ஆம் திகதிகளிலும், பெப்ரவரி 3 ஆம் திகதியும் மீண்டும் நடைபெறவுள்ளது.

கொழும்பில் 51 பரீட்சை மத்திய நிலையங்களிலும், யாழ்ப்பாணத்தில் 6 பரீட்சை மத்திய நிலையங்களிலும் இந்தப் பரீட்சைகள் நடைபெற இருக்கின்றன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித தெரிவித்துள்ளார். இந்தப் பரீட்சை 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம், 23 ஆம் மற்றும் 29 ஆம் திகதிகளில் நடத்தப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பரீட்சைகளுக்கு எட்டாயிரத்து 27 பேர் தோற்றவுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir





# அன்றைய அமெரிக்கர்களின் கதை கூறும் 11,500 ஆண்டுகளுக்கு முந்தைய மரபணு!

அலாஸ்காவில் பூமிக்கடியில் இருந்த 11,500 ஆண்டுகளுக்கு முந்தைய ஒரு பெண் குழந்தையின் உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இது அமெரிக்காவில் பழங் காலத்தில் வாழ்ந்த மக்கள் குறித்த ஒரு புதிய விளக்கத்தை அளிப்பதாக அமைந்துள்ளது.

இந்த உடல் பாகங்களில் செய்யப்பட்ட மரபணு பகுப்பாய்வுகளும், பிற தரவுகளும், இதுவரை அறியப்படாத பண்டைய இனக் குழுவைச் சேர்ந்ததாக அந்தக் குழந்தை இருந்திருக்கலாம் என்று காட்டுகிறது.

அவளுடைய டிஎன்ஏவில் இருந்து தாங்கள் அறிந்தது குறித்து விஞ்ஞானிகள் குறிப்பிடுகையில் 20ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சைபீரியாவில் இருந்து அமெரிக்கக் கண்டத்துக்கு ஒரு மக்கள் அலை இடம் பெயர்ந்ததாக உள்ள கருத்துக்கு இந்த மரபணு (டிஎன்ஏ) வலு சேர்ப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

கடல் நீர்மட்டம் குறைந்ததையடுத்து பெரிங் ஜலசந்தியில் வறண்ட நிலம் உருவானது. அதன் பின்னர் வடக்கு பகுதியைச் சேர்ந்த பனிப் பாறைகள் உருகின அதை அடுத்து அந்த நிலங்கள் மீண்டும் மூழ்கின.

அங்கு முதலில் குடியேறியவர்களே தற்கால அமெரிக்கப் பூர்வகுடிகளின் முன்னோர்கள் எனக் கூறியுள்ளனர் பேராசிரியர் எஸ்கே வில்லெர்ஸ்லெவ் மற்றும் அவருடைய குழுவினர். அந்த பேராசிரியரின் குழுவே குழந்தையின் டிஎன்ஏ மரபியல் மதிப்பீடு குறித்து இயற்கை எனும் சஞ்சிகையில் வெளியிட்டுள்ளது.

ஆறு வார வயதுடைய அந்தப் பெண் குழந்தையின் எலும்புக்கூடு 2013 ஆம் ஆண்டு அலாஸ்காவில் உள்ள சன்



ரிவர் எனும் தொல்லியல் தளத்தில் பூமிக்கடியில் இருந்து தோண்டியெடுக்கப்பட்டது.

அங்குள்ள உள்ளூர் பூர்வீக சமூகத்தினர் அவளுக்கு Xach'itee'aanenh t'eede gay அல்லது சன்ரைஸ் பெண் குழந்தை எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்தப் பணியில் ஈடுபட்ட அறிவியல் குழு அவளை எளிமையாக யுஎஸ்ஆர் -1 என குறிப்பிடுகின்றது.

அலாஸ்காவில் கண்டெடுக்கப்பட்டதிலேயே மிகப் பழைய மனித உடல் பாகங்கள் இவைதான். ஆனால் குறிப்பாக இங்கு சுவாரஸ்யமான விஷயம் என்னவென்றால் இந்தப் பெண் குழந்தை நாம் இதுவரை பார்த்திராத மனித இனத்தைச் சேர்ந்தது என விவரிக்கிறார் கோபேன்ஹேகன் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களுடன் தொடர்புடைய பேராசிரியர் வில்லெர்ஸ்லெவ்.

இந்த மக்கள் மிகவும் தற்காலத்திய அமெரிக்கப் பூர்வகுடிகளுடன் உறவுடையவர்களாக இருக்கின்றனர். ஆகவே, நீங்கள் இவள் மிகப் பழமையான கூட்டத்தில் இருந்தோ அல்லது மிகவும் அசலான பூர்வீகக் குடி அமெரிக்க குழுவில் இருந்தோ வந்ததாகக் கூறலாம்.

முதல் பூர்வீக அமெரிக்க குழுக்கள் பலவகைப்பட்டன. ஆகவே பூர்வீகக் குடி அமெரிக்கர்களின் முன்னோர்கள் குறித்து இந்தப் பெண்ணின் உடல் பாகங்கள் விவரிக்க முடியும் என பிபிசி செய்தியாளரிடம் கூறியுள்ளார் பேராசிரியர் வில்லெர்ஸ்லெவ்.

தலைமுறைகளின் டிஎன்ஏவில் குவிந்திருக்கும் பிறழ்வுகள் அல்லது சிறிய பிழைகள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்வதன் மூலம் பழங்கால மக்களின் வரலாறு குறித்து விஞ்ஞானிகள் ஆய்வு செய்கின்றனர்.

இந்த டி.என்.ஏ. பாங்குகளை இனப் புள்ளியியல் மாதிரியுடன் சேர்த்து பல்வேறு காலகட்டத்தில் பல்வேறு குழுக்களுக்கு இடையேயான தொடர்புகள் குறித்து வரையறுக்க முடிகிறது.

தற்போதைய மக்களின் மூதாதையர்கள் கிட்டத்தட்ட 34ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் கிழக்கு ஆசியர்களிடமிருந்து தனித்துவ மரபணுரீதியாக மாறத்துவங்கியது குறித்து ஒரு புதிய ஆய்வு கூறுகிறது. இந்தப் பிரிவினையானது சுமார் 25 ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் முடிந்தது. சைபீரியா மற்றும் அலாஸ்கா இடையிலான நில இணைப்புப் பாலம் அந்த கால மனிதர்களால் கடந்து செல்லப்பட்டதையும் இந்த ஆய்வு காட்டுகிறது.

பண்டைய பெரின்கியன் குழுவைச் இந்த (யுஎஸ்ஆர்) 1 பிரதிநிதித்துவம் செய்வதாகவும் பின்னர் அமெரிக்காவின் முன்னோடி குடியேறிகளில் இருந்து பிரியத் தொடங்கியதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. இந்த மரபியல் ரீதியான பிரிவினை இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்கிறது என்றும் மேலும் அதன் காரணமாக இந்த மக்கள் அலாஸ்காவில் பல ஆயிரம் வருடங்களாக வசித்து வருகின்றனர் என இந்த ஆய்வு கூறுகிறது.

அமெரிக்க முன்னோடி மக்களில் மற்றவர்கள் பனிப் பாறைகளற்ற பிராந்தியங்களை அடைய தெற்கு நோக்கி நகர்ந்துள்ளனர். இந்த முன்னோக்கி நகரும் கிளையானது மரபியல் ரீதியாக வேறுபட்ட இரண்டு குழுக்களாகப் பிரிந்தது. அவை இன்றைய அமெரிக்க பூர்வீகக் குடிகளின் முன்னோர்களாக அங்கீகரிக்கப்படுகின்றனர்.

பேராசிரியர் வில்லேர்ஸ்லெவ் கூறுகையில்; இந்தப் பெண்ணின் மரபணுவுக்கு முன்னதாக நவீன பூர்வீக அமெரிக்கர்கள் மற்றும் பண்டைய சைபீரியர்களை வைத்து அவர்களுக்கு இடையேயான உறவுகள் மற்றும் பிரிவினை காலத்தை கணிக்க முயற்சி செய்து வந்தோம். ஆனால், இப்போது அந்த இரண்டு வித மக்களுக்கு இடைப்பட்ட ஒரு தனி நபரின் உடல்பாகங்கள் கிடைத்திருக்கின்றன. இது அடிப்படை கேள்விகளுக்கு விடைகாணும் முயற்சிகளுக்கான கதவைத் திறந்துவிட்டுள்ளது என்றார்.

வடகிழக்கு சைபீரியா மற்றும் அலாஸ்காவில் மேலும் எஞ்சியுள்ள சில உடல் பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் மட்டுமே இன்னும் உறுதியான பதில்கள் கிடைக்கும் என அந்த விஞ்ஞானி கூறினார்.



வடமேற்கு அமெரிக்க மாகாணங்கள் விஷயத்தில் இந்த முன்னோர்களை கண்டறியும் விஷயம் சிக்கலுக்குள்ளானது ஏனெனில் அதன் மண்ணின் அமிலத்தன்மையானது எலும்புக்கூடுகளை பதப்படுத்தவும் குறிப்பாக அதன் டிஎன்ஏவை எடுத்து அறிவதற்கும் சாதகமற்றதாக்கியுள்ளது. ★

## உலகில் முதன்முதலாக இத்தாலிப் பெண்ணுக்கு தொடுவுணர்வுடைய செயற்கை கை

உலகிலேயே முதல் முறையாக தொடும் பொருள்களை உணரும் தன்மை உடைய செயற்கை கை ஒன்றை உயிர்மின்னணுவியல் தொழில்நுட்பம் மூலம் இத்தாலியில் உள்ள அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த வாகன விபத்து ஒன்றில் தனது இடது கையை இழந்த அல்மினா மஸ்கரெல்லோ எனும் பெண்மணிக்கு அந்தக் 'கை' பொருத்தப்பட்டுள்ளது. "இழந்த கை மீண்டும் கிடைத்ததை போல் உள்ளது," என்று அவர் கூறியுள்ளார்.

இந்தக் கையை உருவாக்கிய இதே ஆராய்ச்சியாளர்கள் குழுவினர், கடந்த 2014 ஆம் ஆண்டிலேயே தொடு உணர்வுள்ள செயற்கை கை ஒன்றை உருவாக்கினார்கள்.

எனினும், அந்தக் கையுடன் பொருத்தப்பட்டிருந்த தொடு உணர்வை உள்வாங்கும் கருவி (சென்சார்) மற்றும் கணிப்பொறி ஆகியன அளவில் பெரியதாக இருந்ததால், அதை ஆய்வகத்துக்கு வெளியில், அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் சாத்தியங்கள் இல்லாமல் போயின.

அதே கருவிகளை ஒரு தோள்பையில் சுமந்து செல்லும் அளவுக்கு சிறிய அளவில் தற்போது உருவாக்கியுள்ளனர் அந்தக் குழுவினர்.

இத்தாலி, சுவிற்ஸ்ஸர்லாந்து மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பொறியாளர்கள், அறுவைச் சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் வல்லுநர்கள், மின்னணுவியல் மற்றும் ரோபோடிக் வல்லுநர்கள் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர். அந்த செயற்கைக் கையால் தொடப்படும் பொருள் மென்மையானதா, வன்மையானதா என்பதை அறியும் உணர்கருவி அத்துடன் பொருத்தப்பட்டுள்ளது.

அந்தக் கருவி, அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சிறிய கணிப் பொறிக்கு அனுப்பும் சமிக்ஞை மூலம் மூளை அப்பொருளைத் தொடுவதை உணரும் வகையில் அந்தக் கை உருவாக்கப்பட்டுள்ளது.

ஆய்வக சோதனைகளின்போது அல்மினாவின் கண்கள் கட்டப்பட்டிருந்தாலும், தான் என்ன பொருளைத் தொடுகிறேன் என்பதை அவர் சரியாகக் கூறியுள்ளார்.

எனினும், அது இன்னும் சோதனை நிலையிலேயே இருப்பதால் அல்மினாவுக்கு அந்த செயற்கைகை ஆறு மாதங்களே பொருத்தப்பட்டிருந்தது. ஆய்வுகள் முழுமை செய்யப்பட்ட பின்பு, அந்தக் கையை மீண்டும் பொருத்திக் கொள்ள அவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# "ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...?"

தொகுப்பு: பொன்.வேணுகிருஷ்ணா

**ஜெருசலேம் குறித்து விவாதிக்க டிசெம்பர் 13 இல் இஸ்லாமிய நாடுகளின் அமைப்பினது ஓர் அவசர கூட்டத்தை ஏற்பாடு செய்துள்ள துருக்கிய ஜனாதிபதி ரெசிப் தயிப் எர்டோகன், இந்த ஒட்டுமொத்த பிராந்தியத்தையும் ட்ரம்பின் உரை 'நெருப்பு வலையத்திற்குள்' மூழ்கடித்துள்ளது என எச்சரித்தார். ஆனால், துருக்கி உட்பட அப்பிராந்தியத்தில் உள்ள அனைத்து முதலாளித்துவ ஆட்சிகளுமே பல தசாப்தங்களாக பலஸ்தீனர்களை ஒடுக்குவதற்கு உடந்தையாய் இருந்துள்ளன.**

'சமாதான நடைமுறை' மற்றும் 'இரு-அரசு தீர்வு' எனப்படும் மோசடியை ட்ரம்ப் திடீரென கைவிட்டிருப்பது, அடிப்படையிலேயே முதலாளித்துவ தேசியவாதத்தின் பிற்போக்குத்தனமான குணாம்சத்தை எடுத்துக்காட்டுவதுடன், ஒரு சோசலிச மத்திய கிழக்கிற்கான ஒரு பொதுவான போராட்டத்தில் அரபு மற்றும் யூத தொழிலாள வர்க்கத்தை ஐக்கியப்படுத்துவதற்கான ஒரு சோசலிச சர்வதேசவாத மாற்றீட்டுக்கான அவசியத்தை முன்நிறுத்துகிறது.

ட்ரம்பின் கொள்கை மாற்றம், வொஷிங்டனுக்கும் அதன் பெயரளவுக்கான ஐரோப்பிய கூட்டாளிகளுக்கும் இடையிலான விரிசலையும் தீவிரப்படுத்துகிறது. பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி அனைத்தும் ட்ரம்பின் அறிக்கையைக் கண்டித்தன. வெள்ளை மாளிகை அறிக்கையை நேரடியாக விமர்சிப்பதைத் தவிர்த்துக் கொண்ட அமெரிக்காவின் ஒரேயொரு நெருக்கமான கூட்டாளி கனடா மட்டுந்தான்.

அண்மையில் ஓர் அவசர அமர்வுக்கு அழைப்புவிடுத்து ஐ.நா. பாதுகாப்பு கவுன்ஸிலின் ஆறு ஏனைய அங்கத்தவர்களுக்கு பிரிட்டனும் பிரான்ஸும் தலைமை கொடுத்தன. ஆச்சரியத்திற்கு இடமின்றி, அக்கூட்டத்திற்கு கோரிய எட்டு நாடுகளில் அமெரிக்கா இடம்பெறவில்லை.

பாதுகாப்பு அவையில், அமெரிக்கத் தூதர் நிக்கி ஹேலே ட்ரம்ப் நிர்வாகத்தின் நிலைப்பாடு மீதான எந்தவொரு விமர்சனத்தையும் பிடிவாதமாக நிராகரித்தார், அதற்குப் பதிலாக அவர் ஐ.நா. ஒருதலைப்பட்சமாக இஸ்ரேல்-விரோதமாக இருக்கிறது எனக் கூறி அதைத் தாக்குவதை நோக்கித் திரும்பி இருந்தார். இரு - அரசுத் தீர்வுக்கு இரு தரப்பும் ஒப்புக் கொள்கின்றன என்றால் வொஷிங்டன் இப்போதும் அதை ஏற்றுக்கொள்ளுமென அப்பெண்மணி வாதிட்டார்.

பலஸ்தீன மக்களை ஒடுக்குவதில் ட்ரம்பை விட, ஐரோப்பிய ஏகாதிபத்திய சக்திகள் அதிக அக்கறை செலுத்துகின்றன. அவை வொஷிங்டனை விலையாகக் கொடுத்து மத்திய கிழக்கில் அவற்றின் செல்வாக்கைப் பலப்படுத்திக் கொள்ளத் தற்போதைய இந்த நெருக்கடியை ஒரு சந்தர்ப்பமாகப் பார்க்கின்றன.





ஐரோப்பிய ஒன்றிய வெளியுறவுக் கொள்கை தலைவர் பெடிரிகா மொஹிரினி, அமெரிக்காவின் அணுகுமுறை 'நம்மை முன்பினும் இருண்ட காலங்களுக்குப் பின்னோக்கித் தள்ளும் சாத்தியக்கூறைக் கொண்டுள்ளது' என்றும், 'ஜெருசலேமில் என்ன நடக்கிறதோ அது அப்பிராந்தியம் முழுவதையும் மற்றும் ஒட்டுமொத்த உலகையும் கவலை கொள்ளச் செய்கிறது' என்றும் அறிவித்தபோது, பேர்லின் மற்றும் பரிஸில் நிலவும் சிந்தனைகளைத் தொகுத்தளித்தார். ட்ரம்பின் அறிவிப்பால் சமாதான நடைமுறையில் வொஷிங்டன் வகித்த பாத்திரம் நலிந்து விட்டது என அப்பெண்மணி தெரிவித்தார் - அதாவது ஐரோப்பிய ஒன்றியம் அப்பிராந்தியத்தில் ஒரு முனைப்பட்டு, இன்னும் ஆக்கபூர்வமாகப் பாத்திரம் வகிக்க வேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

பிரெஞ்சு வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன்-ஈவ் லு திரியோன், வொஷிங்டன் மத்திய கிழக்கில் ஒரு மத்தியஸ்தராக இருந்து வருவதில் இருந்து தன்னைத்தானே விலக்கிக் கொண்டுவிட்டது என்றார்.

**ஜேர்மனியின் Suddeutsche Zeitung கட்டுரை ஒன்றில் குறிப்பிடுகையில், வடகொரியா மீதான ட்ரம்பின் ஆத்திர மூட்டல்கள் போல் இல்லாமல், மத்திய கிழக்கில் ஐரோப்பிய ஒன்றியம் 'நேரடியாக அழைக்கப்பட்டுள்ளது,' என்று குறிப்பிட்டது. அது தொடர்ந்து குறிப்பிட்டது: 'புவியியல்ரீதியில் அருகில் இருப்பதாலும், வரலாற்று, அரசியல் மற்றும் பொருளாதார உறவுகள் இருக்கின்றமையாலும், ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒரு பொறுப்பு இருக்கிறது என அது காண்கிறது. இதற்காக நிச்சயமாக அது கடந்த காலத்தில் நீதி வழங்க முடியாதிருந்தது.'**

இந்தக் கருத்துக்கள் ஜேர்மன் வெளியுறவு மந்திரி சிக்மார் காப்ரியேலின் வெளியுறவுக் கொள்கை உரையின் முக்கிய குறிப்புகளின் அடியொற்றி வருகின்றன. ஜேர்மன் அமெரிக்காவிற்கு எதிராக இன்னும் பலமாக எதிர்த்து நிற்க வேண்டும் மற்றும் அதன் சொந்த வெளியுறவுக் கொள்கை அபிலாஷைகளை வரையறுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தி இருந்தார்.

ஜெருசலேம் மீது ஆழமடைந்து வரும் நெருக்கடி ஒரு பிராந்திய மோதலின் அச்சுறுத்தலை மட்டுமல்ல, மாறாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஏகாதிபத்தியம் இரண்டுமே அவற்றின் செல்வாக்கைப் பலப்படுத்த முனைகின்ற நிலையில், மத்திய கிழக்கு எங்கிலும் வல்லரசு போட்டியாளர்களின் தீவிரப்பாட்டுக்கு ஒரு தூண்டுபொருளாக சேவையாற்றக்கூடும் என்பதையே ஐரோப்பிய விடையிறுப்பு எடுத்துக் காட்டுகிறது.

### வடகொரியா உடனான அமெரிக்கப் போருக்கு அச்சுறுத்தும் அறிகுறிகள்

வடகொரியாவுக்கு எதிரான போர் குறித்த அமெரிக்காவின் முன்னேறிய தயாரிப்புக்களின் மற்றோர் அறிகுறியாக, பெப்ரவரியில் தென்கொரியாவில் நடைபெறவிருக்கும் குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு அமெரிக்க



விளையாட்டு வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று ட்ரம்ப் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகளுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலி Fox News இல் பேசுகையில், அமெரிக்க அணியினரின் பங்கேற்பு என்பது 'வெளிப்படையாகவே ஒரு கேள்விக்குறியாக' உள்ளது என்று தெரிவித்தார். அதேவேளையில், அவர் எதையும் உறுதியாகக் கேட்டிருக்கவில்லை என்று ஹேலி மறுத்தமையோடு, அமெரிக்கக் குடிமக்களின் பாதுகாப்புப் பற்றி, அதாவது 'அது ஜெருசலேம் பற்றியதா அல்லது வடகொரியா பற்றியதா' என்பதைக் குறிப்பிடாமல், 'தினமும் பேச்சுகள் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என' மட்டும் அவர் தெரிவித்தார்.

**இந்தப் பிரச்சினையை தெளிவுபடுத்துவதற்கு அப்பாற்பட்டு, வெள்ளை மாளிகைச் செய்தித் தொடர்பாளர் சாரா ஹக்கபீ சாண்டர்ஸ், குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்கா போட்டியிடுமா என்பது பற்றி 'எந்தவித உத்தியோகபூர்வ முடிவும் எடுக்கப்படவில்லை' என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இதில் பன்மடங்கு முகவர்கள் ஈடுபடுவர், அது வரை ஒரு முடிவையும் எடுக்க முடியாது, 'ஆனால், இறுதியாக ஜனாதிபதி இது குறித்து நிச்சயமாக பரிசீலிப்பார் என்று நான் கருதுகிறேன்' என்று அவர் கூறினார்.**

சில நிமிடங்களுக்குப் பின்னர், சாண்டர்ஸ் இந்தப் பிரச்சினையைக் குறைத்துக் காட்டுவதற்கு முனைந்து, 'குளிர்கால ஒலிம்பிக் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு அமெரிக்கா காத்திருக்கிறது' என்று ட்வீட் செய்தார். யதார்த்தத்தில், ஹேலி கருத்துத் தெரிவிப்பதற்கு முன்னர், அமெரிக்கா போட்டியிடாது என எவரும் கூறாத நிலையில், நிச்சயமாக எழுப்பப்பட்ட கேள்விக்கான கடினமான பதிலிறுப்



பாகவே சாண்டர்ஸின் ட்வீட் உள்ளது.


அவர்களாகவே விடுத்த கருத்துக்களாக இருப்பதால் அவை தீங்கற்றனவாகத் தோன்றக்கூடும். இருப்பினும், வடகொரியாவிற்கு எதிரான ட்ரம்ப் நிர்வாகத்தின் பொறுப்பற்ற மற்றும் ஆத்திரமூட்டும் வகையிலான அச்சுறுத்தல்களால் கொரிய தீபகற்பத்தில் உருவாக்கப்பட்டுள்ள தீவிர பதற்றங்களுக்கு மத்தியில், வெள்ளை மாளிகையில் போர் குறித்து தினமும் விவாதிக்கப்பட்டு வருகின்ற ஒரு கொதிப்பான சூழல் நிலவுவதை இந்த கருத்துக்கள் சுட்டிக்காட்டுகின்றன.

(கேள்வி தொடரும்...)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமா கின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 60

ஊரெழுக் கம்பன் கழகம்

**வித்துவான் க.ந.வேலன்**

எங்களை வளர்த்தெடுத்தவர்களுள் இவர் மிக முக்கியமானவர். மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியராக இருந்த இவர், ஆரம்பத்திலேயே எங்களை இனங்கண்டு எங்கள் மேல் அன்பு காட்டினார். ஆளுமையுள்ள தமிழ்ப் புலவர். யாருக்கும் அஞ்சாதவர். தமிழிலக்கியங்களில் சுய பார்வையைச் செலுத்தும் கலையை, எமக்குக் கற்றுத் தந்தவர். தமிழ்ப் புலவர்கள் மென்மையானவர்கள் எனும் கருத்துக்கு மாறாய் வாழ்ந்தவர். தன் தனிப் போக்கால் மற்றைத் தமிழ்ப் புலவர்களிலிருந்து வேறுபட்டு நின்றவர். சிறுமை கண்டு பொங்குபவர். எங்கள் வித்துவான் ஆறுமுகம் சிவராமலிங்கம் மாஸ்ரரும் இவரும், ஒரே காலத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் கற்றவர்கள். அம்மூவருடைய நட்பும் ஆச்சரியமானது.

முரண்பட வேண்டிய இடங்களில் முரண்பட்டு, உடன்பட வேண்டிய இடங்களில் உடன்பட்டு, அன்பு சிதையாமல் நட்பைப் பேணியவர்கள் இவர்கள். யாழ். இந்துக் கல்லூரியில் நடந்த எங்கள் கலை விழாவின், வழக்காடு மன்றத்தில் நாங்கள் பேசியது கேட்டு மகிழ்ந்து, பெரிய ஆசிரியர்களுக்கு எதிராக, எங்களுக்கு இவர் தீர்ப்புத் தந்தது பற்றிச் சொல்லியிருக்கிறேன். அன்றிலிருந்து அவருடனான உறவு தொடர்ந்தது. என்னை உயிரிலும் மேலாக நேசித்தார். அக்காலத்தில் மேடையை ஆட்கொண்ட பேச்சாளர்களில் இவருக்கே முதலிடம். கல்வி பற்றி விரிந்த எண்ணம் கொண்டிருந்தார். அவ் எண்ணத்தை எங்களுக்கும் தொற்ற வைத்தார். எல்லாரோடும் முரண்பட்டு நிற்பவர். வித்துவான் வேலனும் அவரது துணைவியாரும், எங்கள் மேல் காட்டிய அன்பை உயிருள்ளவரை மறக்க முடியாது. என் அறிவு வளர்ச்சி, சுய சிந்தனை, இலட்சிய வாழ்வு, தொடர் தேடல், உண்மைக் கடவுள் நம்பிக்கை, பாசாங்கற்ற வழிபாடு ஆகியவற்றுக்கு வழிகாட்டியதில், என் ஆசிரியர்களில் இத்தெய்வத்திற்கே முதலிடம். இரண்டாயிரம் ஆண்டளவில் லண்டனில் இவர் காலமானார். அவர் காலமான பின்பு, நான் எழுதிய 'வேலன் என்றொரு வேழம்' எனும் கட்டுரை 40 ஆவது இயலில் உள்ளது. அக்கட்டுரை நீங்கள் அவரை முழுமையாய்த் தரிசிக்க உதவும்.

★ ★ ★

**சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி**

நான் பேச்சுத் துறைக்குள் நுழையும் முன்பே, என் மனதில் பக்திக்குரியவராய்ப் பதிந்தவர் இவர். ஓர் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே, தன் தனி வாழ்க்கையைத் துறந்து, சமயச் சொற்பொழிவுகளை ஆலயந்தோறும் ஆற்றிவந்தார். அந்தக் காலத்தில், அம்மையாரின் சொற்பொழிவுகளுக்கு ஒரு தனி மதிப்பு இருந்தது. ''சிவத்தமிழ்ச் செல்வி எங்கள் ஆலயத்திலும் பேசியிருக்கிறார்'' என்று பலரும் பெருமையாகப் பேசுவதைக் கேட்டிருக்கிறேன். அக்காலத்தில், வேறு ஒருசில பெண்மணிகள் ஆலயங்களில் பேசி வந்த போதும், இவரதும் திருமதி வசந்தா வைத்தியநாதனதும் சொற்பொழிவுகளே, பக்திக் கண்ணோட்டத்தோடும் மரியாதையோடும் பார்க்கப்பட்டன. அருவி போல் சிவத்தமிழ்ச் செல்வி பேசும் பேச்சு, அழகுற அமைந்திருக்கும். ஆழம் நிறைந்திருக்கும். இவர் தமிழிலும் சமயத்திலும் நிறைந்த புலமை பெற்றிருந்தார். கொச்சைத் தமிழ் கலக்காமல் செந்தமிழில் தொடர்ந்து பேசுவார். அவரது பேச்சை அப்படியே எழுதினால், சிறந்த ஒரு கட்டுரையாக அது அமையும் என்று எண்ணுவேன். அவரை யாழ்ப்பாணம், ஒரு சிவனடியாரைப் போலவே போற்றி வந்தது.

★ ★ ★

**அம்மையாருடனான முதற் சந்திப்பு**

யாழ். இந்துக் கல்லூரியில் நான் கலை விழாவினை நடத்திய பொழுது, அவ்விழாவில் அம்மையாரையும் பேச வைக்க வேண்டும் என விரும்பி, அவரது சொந்த ஊரான அளவெட்டியில் அமைந்திருந்த, இல்லத்திற்குச் சென்றேன். நான் போனபோது நிலத்தில் இருந்தபடி, 'டிரெசிங் கவுனுடன்' அம்மியில் ஏதோ அரைத்துக் கொண்டிருந்தார். அதுதான் அவருடனான எனது தனிப்பட்ட முதற்சந்திப்பு. என் அழைப்பையேற்று வந்து பேசி விழாவைச் சிறப்பித்தார். நாம் விழா நடத்திய ஒழுங்கினைக் கண்டு, என் மேல் மதிப்பும் அன்பும் பூண்டார்.

அதன்பின்பு, காணும் போதெல்லாம் என்மேல் அன்பு பாராட்டுவார். சேக்கிழார் விழா ஒன்றில் நான் பேசிய பின்பு, அருகிருத்தி ''உடம்பை நன்றாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று சொன்னார். குரலைத் தாழ்த்தி, ''மச்சம் சாப்பிடுவீரோ?'' என்று கேட்டார். நான் பொய் பேசவிரும்பாமல் ''சாப்பிடுவேன் அம்மா!'' என்றேன். அதை விட்டு விடும் என்று சொல்வார் என நான் எதிர்பார்த்ததற்கு மாறாக, அம்மையார் ''அது பரவாயில்லை, போகப் போக விடலாம், இப்ப உடம்பை வடிவாப் பார்த்துக் கொள்ளும்'' என்று, ஒரு தாய்க்கே உரியதான அன்போடு, அறிவு நிலைகளைக் கடந்து அவர் சொன்னது, இன்றும் என் நெஞ்சில் பதிவாக இருக்கிறது.

★ ★ ★

**ஆளுமைத் தலைவர்**

பின்னர் அம்மையார் நாம் நடத்திய கம்பன் விழாக்கள் பலவற்றிலும் கலந்து, உரையாற்றிச் சிறப்பித்தார். பிற்காலத்தில் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலில் தலைவராக, பொறுப்பேற்ற பின் அவரது நிலையே மாறிப் போயிற்று. அதுவரை அவரது சொற்பொழிவுத் திறனைக்கண்டு வந்த யாழ்ப்பாணம், அவர் ஆலயத்தின் தலைவரான பின், அவரது நிர்வாகத் திறனையும் ஆளுமையையும் கண்டு வியந்து ஆலயங்களை சமூகப் பணி நோக்கித் திருப்பி, அவர் தனிப் பெருமை தேடிக்கொண்டார். தன் இல்லத்தை விட்டு ஆலயத்தையே தன் இருப்பிடமாக்கினார். அவர் வந்து அமர்ந்ததும் ஆலயம் விறுவிறுவென வளர்ச்சி பெற்றது. ஒரு காலத்தில் வௌவால் பிடித்துக் கிடந்த ஆலயம், கோபுரம், தீர்த்தம், தேர், முதியோர் இல்லம், மகளிர் இல்லம் என, சிறப்புக்கள் பெற்று 'துர்க்காபுரம்' ஆகிற்று.

★ ★ ★

**ஆலயத்தை சமூகம் நோக்கி நகர்த்தியவர்**

ஆதரவற்ற குழந்தைகளையும், பெண்களையும், முதியோரையும் தன் ஆலய வரம்புக்குள் அணைத்து ஆதரவளிக்கத் தொடங்கினார் அம்மையார். உலகெங்கணும் இருந்து அவர் தொண்டுக்கு ஆதரவு குவிந்தது. செல்வத்தைக் கண்டு அவர் அசையவே இல்லை. இன்ப துன்பங்களைச் சமமாக ஏற்றுக்கொள்ளும் பக்குவம் பெற்றார். ஒரு முறை ஏதோவோர் இயக்கம் சார்ந்த கொள்ளையர்கள், ஆலயத்துக்குள் புகுந்து அம்மையாரை மிரட்டி, அவருடன் இருந்த சிவபாலன் போன்ற தொண்டர்களைக் கட்டிப் போட்டு, ஆலய நகைகள் அனைத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர். அன்றும் எதுவித அசைவுமின்றி அம்மையார் செயற்பட்டது என்னை ஆச்சரியப்படுத்தியது. ஒரு வருட முடிவுக்குள் கொள்ளையடித்தவர்களே அத்தனை நகையையும் ஆலய எல்லைக்குள் மீளப் போட்டுச் சென்றார்கள். அச்செயல் அம்மையாரின் ஆன்மீக வாழ்வின் வெற்றியை, உலகிற்கு எடுத்துக்காட்டியது.

கடும் போர் யாழ்ப்பாணத்தில் நடந்த போது, இராணுவ வரம்பாக இருந்த தெல்லிப்பழையில், அசையாது நின்று எல்லைக் காளியாய்க் காவல் செய்தார். ஒருமுறை விமானக் குண்டு வீச்சில் ஆலயம் சிதைவுற்று, அவர் வளர்த்த ஓர் அநாதைக் குழந்தை இறந்துபோனதை அறிந்து, ஆபத்தான சூழ்நிலையிலும் அவரைக் காண ஓடினோம். கனத்த இதயத்தோடு ஒரு கல்லில் குந்தியிருந்து, நடக்க வேண்டிய காரியங்களை, உறுதியோடு செயற்படுத்திக் கொண்டிருந்த அவரைக் கண்டு, நான் வியந்து, விறுவிறுத்துப் போனேன். அம்மையார் பற்றிய நினைவுப் பதிவுகள் பற்பல. இவ்வளவு பெருமைமிக்க அம்மையார் எங்களைத் தாய் போல் நேசித்தார். ஆண்டுதோறும் கம்பன் விழா நடத்த பணம் தந்து உதவினார். எங்களோடு பாண்டிச்சேரிக் கம்பன் விழாவிற்கு, ஒரு சாதாரண பெண்மணி போல உறவு கொண்டாடி வந்து போனார். தனது பிறந்த நாளொன்றில், சமயப் பேச்சாளர்களில் ஒருவராய் என்னைக் கௌரவித்தார்.

★ ★ ★

**சிறு முரண்பாடு**

நாம் யாழ்ப்பாணத்தை விட்டுப் புறப்படும் முன், புலிகள் இயக்கத்துடன் ஏற்பட்ட முரண்பாட்டில், நடுநிலை நிற்கத் தவறினார் என்ற ஒரு குறைபாட்டைத் தவிர, என் மனதில் பதிந்துள்ள அவர் பற்றிய எண்ணங்கள் எல்லாம், மதிப்பிற்குரியவையே! அந்நடுநிலைத் தவறுதலுக்குக் கூட, பல பேர் கொடுத்த அழுத்தங்களே காரணம் என அறிந்து ஆறுதற்பட்டேன். கொழும்பு வந்த பின் கூட, அம்மையாரின் அன்பு முன்னர் போலவே குறைவின்றித் தொடர்ந்தது. அதுபற்றிப் பின் எழுதுவேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர்



# ஜனாதிபதியின் அர்ப்பணிப்பின் பெறுபேறே மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டம்!

## ஜனாதிபதியின் செயலாளர் பெருமிதம்



கொழும்பு, ஜன. 08

வறுமையால் பாதிக்கப்பட்டுள்ள ரஜரட்ட அப்பாவி விவசாய சமூகத்தினருக்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கொண்ட அர்ப்பணிப்பினதும் விடாமுயற்சியினதும் பெறுபேறே மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டம் என்று ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இன்று மக்களிடம் கையளிக்கப்படவுள்ள மொரகஹகந்த அபிவிருத்தித் திட்டம் தொடர்பாக ஊடகத்துறை அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே ஜனாதிபதியின் செயலாளர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்ட மகாவலி திட்டத்தைப் பார்க்கிலும் விரிவான திட்டமாகவும் நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வலுசேர்க்கக்கூடிய திட்டமாகவும் மொரகஹகந்த திட்டத்தை அடையாளப்படுத்த முடியும்.

இந்த அபிவிருத்தித் திட்டம் ஜனவரி 08 ஆம் திகதியுடன் முடிவுறாது என்பதுடன், அதன் நன்மைகளை கிழக்கு மற்றும் வடக்கு மக்களுக்கும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்றும் ஜனாதிபதியின் செயலாளர் குறிப்பிட்டார்.

நான்கு தசாப்தங்களின் பின்னர் நாட்டில் நிர்மாணிக்கப்பட்ட பெரிய பல்நோக்கு அபிவிருத்தித் திட்டமாக மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டம் மக்களிடம் கையளிக்கப்படும் நிகழ்வு இன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மொரகஹ கந்த அபிவிருத்தித் திட்ட வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

'சினோ ஹைட்ரோ' சீன நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டுள்ள மொரகஹகந்த நீர்த்தேக்கத் திட்டம் அன்றைய தினம் உத்தியோகபூர்வமாக இலங்கை அரசிடம் கையளிக்கப்படவுள்ளது.

மகாவலி இயக்கத்தின் 40 வருட நிறைவை முன்னிட்டு இடம்பெறும் அரச விழா அதனோடு இணைந்ததாக ஜனாதிபதியின் தலைமையில் பொல்கொல்ல அணைக் கட்டுக்கு அருகில் இடம் பெறவுள்ளது.

நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் ஜனவரி 08 ஆம் திகதி பொல்கொல்லயில் ஆரம்பிக்கப்பட்ட மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் நிறைவாக இன்று மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை மக்களிடம் கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

40 வருட மகாவலி திட்டத்தின் மகிமையை முன்னிட்டு இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3 லட்சம் ஏக்கர் காணிகள் புதிதாக பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டு, 15 லட்சத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு நன்மையளிக்கும் அதேநேரம் 3 லட்சம் பேருக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் மொரகஹகந்த - களுகங்கை பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தனிப்பட்ட அர்ப்பணிப்பு மற்றும் வழிகாட்டலின் பேரில் துரிதப்படுத்தப்பட்டதுடன், இது நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட பெரும் பல்நோக்கு அபிவிருத்தி திட்டமாகும்.

## ஆணைக்குழுவின் அறிக்கையை வைத்து யாரையும் குற்றஞ்சாட்ட முடியாது!

### பேராசிரியர் சரத் அமுனுகம தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 08

ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை வைத்துக் கொண்டு எவர் மீதும் குற்றஞ் சுமத்த முடியாது என பேராசிரியர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

பிணை முறி மோசடி தொடர்பில் விசாரணை செய்து முன்வைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டவர்களுக்கு தண்டனையளிக்க புதிய சட்டம் ஒன்றைக் கொண்டு வர, நாடாளுமன்றத்தில் ஏகமனதாக வாக்குகள் கிடைக்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

## துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜன. 08

உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியை வைத்திருந்த ஒருவர் கொட்டாஞ்சேனை பகுதியில் வைத்து நேற்று முன்தினம் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.



இந்தப் பிரிவுக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலொன்றின் பேரில் மேற்கொள்ளப் பட்டசுற்றிவளைப் பின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

22 வயதான சந்தேகநபர் புதுக்கடை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளார் என்றும் குறிப்பிடப்படுகின்றது.

(க)

## கண்ணீர் விட்டாராம் மஹிந்த ராஜபக்ஷ!



கொழும்பு, ஜன. 08

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது நெருங்கிய நண்பரிடம் தனது ஆதங்கங்களை வெளியிட்டு கண் கலங்கினார் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இலங்கையின் பிரபல நடிகர் ஸ்ரீயந்த மெண்டிஸ், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்துள்ளார். இதன்போது அவரிடம் வருத்தத்துடன் பல விடயங்களை மஹிந்த கூறியுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பரி ஹோட்டலில் நடைபெற்ற தனது மகளின் திருமணத்தில் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுப்பதற்காக, மஹிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கு நடிகர் மென்டிஸ் அவரது விஜேராம இல்லத்திற்குச் சென்றிருந்தார்.

இதன்போது மஹிந்தவினால் விசேட வரவேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஸ்ரீயந்த எனக்கு விசேடமான ஒருவராவார். ஸ்ரீயந்தவின் கோரிக்கைகளுக்கு முடியாதென்று கூறவே முடியாது. நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் என்னை சந்திப்பதற்கு பல கலைஞர்கள் வருகை தருவார்கள். அவர்கள் என்னை சுற்றியே இருந்தனர். இந்த இடத்தில் நடித்து, நடனமாடி பாடல் பாடி மகிழ்ந்த பலர் உள்ளனர். இறுதியில் அதிகாரம் இல்லாமல் போனவுடன் அந்த நபர்களைதேடிக் கொள்ளவே முடியவில்லை. எனினும் ஸ்ரீயந்த நம்முடனே தொடர்ந்து இருந்தார் என மஹிந்த வருத்தத் துடன் அந்த நடிகரிடம் குறிப்பிட்டுள்ளார். அதற்கமைய திருமணத்திற்கு சென்ற மஹிந்தவை சுற்றி இளைஞர்கள் கூடி செல்பி புகைப்படம் எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## மேல் மாகாணப் பாடசாலைகளில் மாணவரை இணைத்துக் கொள்ளும் தேசிய வைபவம்!



கொழும்பு, ஜன. 08

மேல் மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்றில் சேர்த்துக் கொள்ளப்பட உள்ள மாணவர்களுக்கான பாடசாலைகளை அடையாளம் காண்பதற்கான பணிகள் எதிர்வரும் 14 ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளன.

இம்முறை மேல் மாகாணப் பாடசாலைகளில் 80 ஆயிரம் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட உள்ளனர்.


இந்த மாணவர் ஒவ்வொருவர் சார்பிலும் பாடசாலை வளவிலும், மாணவர்களின் வீட்டுத் தோட்டங்களிலும் மரக்கன்று நடும் வேலைத்திட்டமும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பெற்றோருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாக மாகாண மேலதிகக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த மாகாணத்திலுள்ள பாடசாலைகளில் மாணவர்களை இணைத்துக் கொள்ளும் தேசிய வைபவம் எதிர்வரும் 15 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26. 

உருவின் சுற்றளவு யாது?

.............................................


27. தசம எண்களைக் கூட்டுக.

3.4 + 0.5 − 2.1 = ...............

28. உரோம எண்களை ஏறுவரிசையில் எழுதுக.

XII, IX, V, XVI, XIV ..............................................................

29. இவ்வுருவின் $\frac{3}{4}$ பங்கிற்கு நிறம் தீட்டுக.



30. 

| | |
|---|---|
| 1.0, | 0.6 |
| 0.9, | 2.1 |

அடைப்பினுள் உள்ள எண்களில் மிகச் சிறிய எண்ணைத் தெரிவு செய்து எழுதுக. ..............................

31. ரூபாய் 50 ஐக் கொடுத்து பப்பாசிப்பழம் ஒன்றை வாங்கிய போது மீதிப்பணமாக சதம் 50 − ரூபாய் + 2 ரூபாய் 5 கிடைத்தது.

1) கிடைத்த மீதிப்பணம் எவ்வளவு? ரூபாய் ............ சதம் .......... (2 புள்ளி)

2) பப்பாசிப் பழத்தின் விலை யாது? ரூபாய் .......... சதம் .......... (2 புள்ளி)


* **32 - 62 வரையான ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

32. உடல் வளர்ச்சிக்கு உதவும் போசணை மிகுந்த உணவு
1) சோயா அவரை 2) பீற்றூட் 3) தக்காளி 4) கோதுமை ரொட்டி

33. நீரில் இடப்பட்ட பின்வரும் எப்பொருள் நீருக்கு மேல் மிதக்கும்?
1) நிறச்சாயக் கரைசல் 2) தேயிலைச்சாயம்
3) வினாகிரி 4) தேங்காய் எண்ணெய்


34. உடலில் கொதிநீர் கொட்டினால் முதலில் செய்ய வேண்டியது
1) கொட்டிய இடத்தில் குளிர்ந்த நீரை ஊற்றுதல்
2) கொட்டிய இடத்தில் வெண்ணெய் தேய்த்தல்
3) கொட்டிய இடத்தில் உள்ள தோலினை அகற்றுதல்
4) வைத்தியரிடம் கொண்டு செல்லல்

35. கீழுள்ள உடுக்கோலங்களில் சிறுகரடியைக் குறிப்பது
1) 2) 3) 4)



36. வீட்டு பன்னல் கம்பிகளிற்கு நிறம் பூசப் பயன்படுத்தப்பட்ட தூரிகையைத் துப்புரவு செய்யப் பொருத்தமான பொருள்
1) வெந்நீர் 2) வினாகிரி 3) மண்ணெண்ணெய் 4) குளிரேற்றிய நீர்





# கல்விக் கதிர் வெளியீடு

## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

தரம்-5 பிரபல ஆசிரியர் பகுதி II வினாத்தாள் 1

நேரம்- 1 மணித்தியாலம் 15 நிமிடம்

01. **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

நாம் கல்விச் சுற்றுலா சென்றபோது, நம் நாட்டில் இருக்கும் சித்திரக் குன்றமான சிகிரியாவுக்குப் போயிருந்தோம். தூரத்தில் நின்று பார்த்த போது அது, படுத்திருக்கும் ஒரு பெரிய சிங்கம் போலக் காட்சியளித்தது. அருகில் சென்ற போது தான் உண்மையான அமைப்பைக் கண்டு கொண்டோம். இருவர் இருவராக மலையில் ஏறினோம். கோட்டை தெரிந்தது. அக்கோட்டையைச் சுற்றி ஆழியோடு அமைந்த நிலையில் அகழிகள் தென்பட்டன. மேலும் 'சித்திரக் குன்றம்' எனப் பெயர் வரக் காரணமாயிருந்த பல வர்ணச் சித்திரங்களைக் கண்டோம். அச்சித்திரங்கள் பெண் உருவங்களாக இருந்தன.

* **கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்துப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

1) சிகிரியாவுக்கு சித்திரக் குன்றம் எனப் பெயர் வரக் காரணமாக இருந்தவை எவை?

........................................................................................................................

2) கோட்டையைச் சுற்றியுள்ள ஆழமான நீர்நிலைகள் என்பதைக் குறிக்கும் தனிச் சொல்லை எழுதுக. ..........................................................................................

3) ஓவியங்கள் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..............................................

4) இப்பந்தியில் எதிர்க்கருத்துடைய இரு சொற்கள் காணப்படுகின்றன. அவை இரண்டும் எவை?

........................................................................................................................

5) இப்பந்தியில் இடம்பெறும் தன்மைப் பன்மைப் பெயர்ச் சொல்லை எழுதுக.

........................................................................................................................

6) இங்கு இடம் பெறும் உவமானத்தை எழுதுக.

........................................................................................................................

7) பந்தியில் வந்துள்ள பெயரடை மொழியை எழுதுக.

........................................................................................................ (7 x 1 − 7 புள்ளி)

02. **அ) பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (×) எனவும் அடைப்பினுள்ளே அடையாளமிடுக.**

1) ஓவியங்கள் என்பது படர்க்கைப் பன்மைப் பெயர்ச் சொல். [...............]

2) ஏறினோம் என்பது படர்க்கைப் பன்மை இறந்தகால வினைமுற்று. [...............]

(2 புள்ளி)

**ஆ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1) பயிரை அழிப்பது ......................... . (கழை / களை)

2) வீரனிடம் உள்ளது ......................... . (வாள் / வால்)

3) சான்றோர் நன்றிக் கடனுக்காகத் தம்மை ......................... . (அர்ப்பணம் / அர்ப்பனம்)

(3 புள்ளி)

03. **பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) Is this yours? ..............................................................................................

2) Please stop there. ..............................................................................................

(2 புள்ளி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்துக்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1) நான் தாவரங்களுக்கு நீர் ஊற்றுகின்றேன்.

.................................................................................................... (1 புள்ளி)

**05. பின்வரும் சொற்களுக்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1) வெள்ளிக்கிழமை .............................................................................

2) விளையாட்டு மைதானம் ............................................................ (2 புள்ளி)

**06. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

1) அம்மா வந்தாரா? ..............................................................................

(1 புள்ளி)

**07. பின்வரும் வாக்கியத்தின் கருத்தைத் தமிழில் எழுதுக.**

1) ஓபாட்ட (B)படட கினிது? ..............................................................

(1 புள்ளி)

**08. வெற்றிடத்துக்குப் பொருத்தமான சரியான விடையை அடைப்பினுள்ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) "காந்தித் தாத்தா நம் தாத்தா
கருணை மிக்க பெருந்தாத்தா" என்ற பாடலை எழுதிய கவிஞர் .............................. ஆவார்.
(தேசிக விநாயகம்பிள்ளை, அழவள்ளியப்பா, மகாகவி)

2) இராமனின் முடிசூட்டு வைபவத்தைத் தடுத்து நிறுத்தச் சூழ்ச்சி செய்தவள் ..............................
என்பவளாவாள். (கோசலை, கூனி, சுமித்திரை)

3) இராமனுக்குப் பதிலாக அவனது .............................. சிம்மாசனத்தில் வைத்து நாட்டை ஆளப் போவதாக பரதன் கூறினார். (ஆடைகளை, பாதுகைகளை, வில்லை)

(3 புள்ளி)

**9. பின்வரும் குறளில் விடுபட்ட பகுதியைப் பூர்த்தி செய்க.**

.............................. நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. (1 புள்ளி)

**10.** ஓவியம் தருவாய் சிற்பம்
உணர்விப்பாய் கவிதையூட்டக்
காவியம் தருவாய் மக்கள்
கலகல வெனச் சிரிப்பு
மேவிடும் விகடம் சொல்வாய்
என்ற பாரதிதாசனின் இப்பாடல் எதனைக் குறித்துப் பாடப்பட்டது?

.................................................................................................... (1 புள்ளி)

*** 11 - 13 வரையான வினாக்களின் வெற்றிடங்களிற்குப் பொருத்தமான சொல்லை அடைப்பினுள் ளிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

**11.** அலை தாலாட்டும் .............................. (பாடல் / பாடல்கள்) என அழைக்கப்படும்.

**12.** நான் பிறந்த சூழல் மிகவும் அழகான இயற்கைக் காட்சிகளைக் .............................. (கொண்டவை / கொண்டது)

**13.** பாஸ்ட்டரின் கண்டுபிடிப்பினால் உலகம் வெறி நாய்க்கடியின் துன்பத்திலிருந்தும் தப்பும் வழியை .............................. (அறிந்தனர் / அறிந்தது)



**14.** 'டெங்கு' உயிர் கொல்லி நோய்களில் ஒன்றாகும். கவனமில்லாத மனித நடவடிக்கைகளே டெங்கு பரவக் காரணமாகும். 'டெங்கு பரவலைத் தடுக்க நாம் செய்யக்கூடியவை எவை' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் குறைந்தது ஆறு சொற்கள் இடம் பெற வேண்டும்.)

1) ....................................................................................................

....................................................................................................

2) ....................................................................................................

....................................................................................................

3) ....................................................................................................

....................................................................................................

(3 x 2 = 6 புள்ளி)

*** தரப்பட்ட இடத்தில் விடையை எழுதுக.**

15. 10 000 இற்கு முன்னால் வரும் எண்ணை எழுதுக.

....................................................

16. 100 மீற்றர் 10 சென்ரி மீற்றரை சென்ரிமீற்றரில் எழுதுக.

....................................................

17. அடுத்து வரும் இரு எண்களையும் எழுதுக.
3, 9, 27, .............., ..............

18. ஒரு பிள்ளைக்கு 4 விசுக்கோத்துக்கள் வீதம் 36 பிள்ளைகளுக்கு பங்கிட்டுக் கொடுக்கத் தேவையான விசுக்கோத்துக்கள் எத்தனை?

.............................. விசுக்கோத்துக்கள்.

19. பெரிய ரயர் ஒன்றின் நிறை, சிறிய ரயர் ஒன்றின் நிறையின் 3 மடங்கிலும் 10 கிலோகிராம் அதிகமானதாகும். பெரிய ரயரின் நிறை 145 kg எனின், சிறிய ரயரின் நிறை யாது?

.............................. kg

20. 300 மாம்பழங்களில் 60 ஐ மீதப்படுத்தி வைத்து ஏனையவற்றை மூன்று பெட்டிகளில் சமமாக அடுக்கினால் ஒரு பெட்டியிலுள்ள மாம்பழங்கள் எத்தனை?

..............................

21. சதுர வடிவப் பாத்தி ஒன்றின் சுற்றளவு 25m 20cm ஆகும். பாத்தியின் ஒரு பக்கத்தின் நீளம் யாது?

.............. m .............. cm

22. ஒன்றில் 36 பலூன்கள் வீதம் உள்ள 4 பெட்டிகளும் ஒன்றில் 26 பலூன்கள் வீதம் 5 பெட்டிகளும் இருந்தன. 9 பெட்டிகளிலும் உள்ள பலூன்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................

23. நிருத்திகன் 10:15 மணித்தியாலம் என்னும் நேரத்திற்கு வீட்டிலிருந்து புறப்பட்டு 14:35 மணித்தியாலம் என்னும் நேரத்தில் நகரத்தை அடைந்தான். அவன் பயணத்திற்கு எடுத்துக் கொண்ட காலம் எவ்வளவு?

.............. மணித்தியாலம் .............. நிமிடம்

24. 3cm 7mm ஐ மில்லிமீற்றரில் தருக. ..............................mm

25. ஒரு கிலோ கிராம் தேயிலையின் விலை ரூபாய் 375.00 ஆயின் 100g தேயிலையின் விலை யாது?

ரூபாய் .............. சதம் ..............



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானில் கடற்படைத் தளம் கட்டும் சீனா

பீஜிங்,ஜன.08

பாகிஸ்தானில் சீனா கடற்படைத்தளம் அமைத்து வருவது இந்திய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும் எனக் கூறப்படுகிறது.

சீனாவும் பாகிஸ்தானும் தீவிர நட்பு நாடுகளாக உள்ளன. இந்த நட்புறவை மேலும் வலுப்படுத்தும் வகையில், பாகிஸ்தானில் கடற்படைத் தளத்தைச் சீனா கட்டுகிறது. இதற்காக பலுசிஸ்தான் மாகாணம் ஜிவானியில் உள்ள பாகிஸ்தான் இராணுவத் தளத்



தைக் குத்தகைக்கு எடுக்க உள்ளது எனவும் இதுதொடர்பாக பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் செய்தி வெளியாகியுள்ளது.

இத்தளம் ஈரானின் சபாகர் துறைமுகத்தின் அருகில் அமைகிறது. சபாகர் துறைமுகம் ஈரான், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தான் நாடுகளால் இணைந்து கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆப்கானிஸ்தானுக்கு இந்தியா ஏற்றுமதி வர்த்தகம் செய்ய ஏதுவாக உள்ளது.

தற்போது அந்தத் துறைமுகத்தை ஒட்டி ஜிவானியில் தற்போது கட்டப்படும் கடற்படைத் தளம் சீனா- பாகிஸ்தான் கடற்படை மற்றும் விமானப் படைத் தளமாகப் பயன்படுத்தப்பட உள்ளது.

ஜிவானி கடற்படைத் தளம் அமைத்து இத்துறைமுகத்தை விரிவுபடுத்துவதன் மூலம் இந்தியாவுக்கு எதிராக அரபிக் கடலில் கோலோச்ச சீனா முடிவு செய்துள்ளது. இதன் மூலம் இந்திய பாதுகாப்புக்கு கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## 239 பேருடன் மாயமான விமானம்:

# மீண்டும் தேடுதல் வேட்டைக்கு அனுமதித்தது மலேசிய அரசு



கோலாலம்பூர்,ஜன.08

மூன்றாண்டுகளுக்கு முன்னர் 239 பேருடன் மாயமான விமானத்தை மீண்டும் தேடும் அமெரிக்க நிறுவனத்தின் பணிக்கு மலேசிய போக்குவரத்து துறை அமைச்சர் நேற்று முன்தினம் அனுமதி அளித்துள்ளார்.

மலேசியாவில் உள்ள கோலாலம்பூரில் இருந்து சீன நாட்டின் தலைநகரான பீஜிங் நகருக்கு 2014 ஆம் ஆண்டு 227 பயணிகள் மற்றும் விமானிகள் உள்ளிட்ட 12 பணியாளர்களுடன் புறப்பட்டுச் சென்ற மலேசியன் ஏர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான போயிங் 777 ரக விமானம் (எம்.ஹெச். 370) இந்திய பெருங்கடலுக்குள் (தெற்கு) விழுந்தது.

இதையடுத்து, அந்த விமானத்தைத்தேடும் பணியில் விமானங்கள், கப்பல்கள் மற்றும் அணுசக்தி நீர்மூழ்கிக்கப்பல் ஆகியவை ஈடுபடுத்தப்பட்டன. ஆஸ்திரேலியக் கடற்படை கப்பல் ஓன் ஷீல்ட் மற்றும் எச்.எம்.எஸ் எக்கோ என்ற இரண்டு கப்பல்கள் தேடுதல் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இதுதவிர மேலும் பல தனியார் நிறுவனங்களும் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டன.

ஆனால், 1046 நாள்கள் தொடர்ந்து நடைபெற்ற தேடுதல் வேட்டையில் எந்தப் பலனும் கிடைக்காத நிலையில் தேடும் பணியை இத்துடன் நிறுத்திக் கொள்கிறோம் என மலேசியா, சீனா மற்றும் ஆஸ்திரேலிய அரசுகள் அறிவித்தன.

இந்த நிலையில், அமெரிக்காவைச் சேர்ந்த ஒரு நிறுவனம் கண்டுபிடித்தால் பணம் - இல்லாவிட்டால் சேவை இலவசம் என்னும் ஒப்பந்த அடிப்படையில் இந்தியப் பெருங்கடல் பகுதியில் மாயமான அந்த விமானத்தைத் தேட முன்வந்து விருப்பம் தெரிவித்தது. இந்தப் பணிக்காக ஓசியன் இன்பினிட்டி என்னும் அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான அதிநவீன கப்பல் தென்னாபிரிக்காவில் உள்ள டர்பன் நகரில் இருந்து கடந்த வாரம் அனுப்பி வைக்கப்பட் டது.

இந்தப் பணிக்கு மலேசிய போக்குவரத்துத் துறை அமைச்சர் லியோவ் டியாங் அனுமதி அளித்துள்ளார். ஆஸ்திரேலியக் கடல் எல்லைக்குட்பட்ட கடல்பகுதியில் சுமார் 25 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவில் தேடுதல் வேட்டையில் ஈடுபட ஓசியன் இன்பினிட்டி நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# ஆபிரிக்காவின் செனகல் நாட்டில் கிளர்ச்சிக்குழு அதிரடித் தாக்குதல்

தகார்,ஜன.08

ஆபிரிக்காவின் செனகல் நாட்டில் அரசுக்கு எதிராகப் போராடி வரும் கிளர்ச்சியாளர்கள் குழு நடத்திய தாக்குதலில் 13 பேர் பலியாகியுள்ளனர் என இராணுவம் தெரிவித்துள்ளது.



13 பேர் பலி

ஆபிரிக்கக் கண்டத்தில் உள்ள செனகல் நாட்டில் அரசுக்கு எதிராக எம்.எவ்.டி.சி. எனும் கிளர்ச்சிக்குழு செயற்பட்டு வருகிறது. கடந்த 2014ஆம் ஆண்டில் இருந்து அரசுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடிவரும் இந்தக் குழு, கசாமன்ஸ் எனும் இடத்தில் சில நாள்களுக்கு முன்னர் மரம் சேகரித்துள்ளனர்.

இதனை, அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் எதிர்த்ததால் அவர்களைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுள்ளனர். கொல்லப்பட்ட 13 பேரின் உடல்கள் அங்கு கண்டெடுக்கப்பட்டுள்ளன என அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கிளர்ச்சிக்குழுவில் உள்ள இருவர் சந்தேக வளையத்தில் கொண்டு வந்துள்ளோம் என இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

சம்பவம் நடந்த இடம் பிரபல சுற்றுலாத்தளம் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானில் நிலநடுக்கம்

## 5.1 ரிச்டராகப் பதிவு

பாக்தாத்,ஜன.08

ஈரானின் குர்திஸ்தான் பகுதியில் நேற்று முன்தினம் 5.1 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

ஈரான் மற்றும் ஈராக் இடையேயான எல்லைப்பகுதியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஈரான் தலைநகர் தெஹ்ரானிலிருந்து மேற்குத் திசையில் சுமார் 320 கிலோ மீற்றர் தொலைவில் குர்திஸ்தான் பகுதியில் அமைந்துள்ள சர்போல்-இ சஹாப் நகரில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 5.1 ஆகப் பதிவாகியிருந்தது.

இந்த நிலநடுக்கத்தால் சுமார் 8 பேர் காயமடைந்துள்ளனர் என அங்குள்ள செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த நவம்பர் 12ஆம் திகதி இதே பகுதியில் ஏற்பட்ட 7.3 ரிச்டர் நிலநடுக்கத்தில் 600 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும் 10 ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# விலைவாசி உயர்வை சமாளிக்க ஆயிரம் ரியால் உதவிப்பணம்


சவுதி மன்னர் உத்தரவு

ரியாத்,ஜன.08

சவுதி அரேபியாவில் எரிபொருள் விலையேற்றம், வற் வரி போன்றவற்றால் கிடுகிடுவென்று அதிகரித்து வரும் விலைவாசி உயர்வைச் சமாளிக்க அரசப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரியால் உதவிப்பணம் அளிக்க மன்னர் சல்மான் உத்தரவிட்டுள்ளார்.

எண்ணெய் வளம் மிக்க வளைகுடா நாடுகளான சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அமீரக அரசுகளின் வருமானத்தின் பெரும் பகுதி எண்ணெய் ஏற்றுமதி மூலமாக வருகிறது. வருமான வரி மற்றும் இதர பொருள்களின் மீதான வரிகள் விதிக்கப்படாத நிலை இத்தனை காலமும் மேற்கண்ட நாடுகளில் இருந்து வந்தது.

இந்த நிலையில், பெற்றோலியப் பொருள்களின் விலைகள் சர்வதேச சந்தையில் சரிவடைந்ததால் சவுதி அரேபியாவில் நலிவடைந்துவரும் பொருளாதாரத்தை நிமிர்த்திட பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் தொடங்கியுள்ளன. உணவுப் பொருள்கள், துணிமணிகள், மின்னணுப் பொருள்கள், தொலைபேசிக் கட்டணம், தண்ணீர், மின்சார கட்டணம், ஆகியவற்றுக்கு 5 விகிதம் புதிய வற் (மதிப்பு கூட்டு) வரி முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதனால், நாளுக்குநாள் அங்கு விலைவாசி உயர்ந்து வருகிறது. கிடுகிடுவென்று அதிகரித்துவரும் விலைவாசி உயர்வைச் சமாளிக்க அரசப் பணியாளர்களுக்கு மாதந்தோறும் ஆயிரம் ரியால் உதவிப் பணம் அளிக்க சவுதி மன்னர் சல்மான் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளார். இந்த உதவிப்பணம் இராணுவத்தில் பணியாற்றுவோர்களுக்கும் அளிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.



# குளிரால் உறைந்தது 'நயாகரா' நீர்வீழ்ச்சி

நியூயோர்க்,ஜன.08

அமெரிக்காவில் உள்ள உலகின் உயரமான 'நயாகரா' நீர்வீழ்ச்சி கடும் குளிரால் உறைந்து போயிருப்பதை சுற்றுலாப் பயணிகள் பிரமிப்புடன் பார்த்துச் செல்கின்றனர்.

அமெரிக்காவின் பல பகுதிகளில் கடுமையான பனிப்பொழிவு நிலவி வருகிறது. இதனால் வீதிகளில் பல அடி உயரத்துக்குப் பனி நிறைந்துள்ளது. கொட்டும் பனியால் மரங்கள், வீடுகள் என அனைத்தும் வெள்ளைத்துணி போர்த்தியது போலக் காட்சியளிக்கின்றன. அதிகபட்சமாக மவுண்ட் வொஷிங்டனில் மைனஸ் 34 டிகிரி குளிர் நிலவி வருகிறது. கடுமையான குளிர் நிலவி வருவதால் அங்குள்ள ஏரிகள் பனியில் உறைந்து காணப்படுகின்றன.

உலகப் புகழ்பெற்ற சுற்றுலாத் தலமான நயாகரா நீர்வீழ்ச்சியும் அமெரிக்காவின் பனி பொழியும் பகுதியில் அமைந்துள்ளது. இந்த நீர்வீழ்ச்சி கனடாவின் ஒன்டாரியோ மாகாணத்துக்கும் அமெரிக்காவின் நியூயோர்க்கிற்கும் இடையே அமைந்துள்ளது.

இந்த நிலையில் ரம்மியமாகக் காட்சியளிக்கும் 'நயாகரா' நீர்வீழ்ச்சியும் கடும் குளிரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. உலகின் மிக உயரமான இந்த நீர்வீழ்ச்சி பனியால் உறைந்து போயுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீட்க நடவடிக்கை: ஓ.பி.எஸ். உறுதி



சென்னை,ஜன.08

கச்சதீவை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்துள்ளார்.

தமிழக மீனவர்கள் பிரச்சினையில் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா எடுத்த நடவடிக்கைகளை, தற்போது எடப்பாடி கே.பழனிசாமி தலைமையிலான அரசும் எடுத்து வருகிறது.

மேலும், கச்சதீவைத் திரும்பப் பெற ஜெயலலிதா நீதிமன்றம் மூலம் முயற்சி மேற்கொண்டார். அந்த முயற்சி தொடரும். கச்சதீவை மீட்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

இலங்கை சிறையில் வாடும் தமிழக மீனவர்கள் மற்றும் அந்த நாட்டில் உள்ள படகுகளை விடுவிக்க அரசு உரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார். (ப)

# ரஜனியின் சின்னம் சாத்தான் உடையது

### பீதியைக் கிளப்பும் சீமான்



சென்னை,ஜன.08

நடிகர் ரஜனிகாந்த் தனது கையில் காட்டும் பாபா சின்னம், சாத்தான்களின் முத்திரை என நாம் தமிழர் இயக்க ஒருங்கிணைப்பாளர் சீமான் விமர்சித்துள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் தனது படத்தில் வரும் பாபா முத்திரையை, ரசிகர்களின் முன்பாக காட்டியுள்ளார். மேலும், இணையத் தளத்திலும் அதனைப் பயன்படுத்தியுள்ளார்.

இதனை அஸ்த முத்திரை, அபான முத்திரை என்றும் யோக நிபுணர்கள் கூறுகின்றனர். ரஜனியின் ரசிகர்கள், இந்த முத்திரையை தீய சக்தியை விரட்டும் சக்தி முத்திரை என்று கூறி வருகின்றனர்.

இந்த நிலையில், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறுகையில், 'ரஜனி காட்டும் முத்திரை சாத்தானுடையது. அது Symbol of Evil ஆகும். இந்த முத்திரைக்கும் பாபாவிற்கும் என்ன தொடர்பு? எனத் தெரிவித்துள்ளார்.

# காஷ்மீரில் 100 அடிப் பள்ளத்தில் பஸ் கவிழ்ந்ததில் 6 பேர் சாவு

ஸ்ரீநகர்,ஜன.08

காஷ்மீர் மாநிலம் உதாம்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 100 அடி பள்ளத்தில் பஸ் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 6 பேர் பரிதாபமாகப் பலியாகினர்.

ஜம்மு-காஷ்மீர் மாநிலம் உதாம்பூர் மாவட்டத்தில் உள்ள உதாம்பூர் நகரிலிருந்து ராம் நகர் நோக்கி பஸ் ஒன்று சென்று கொண்டிருந்தது. பிற்பகல் 1.30 மணியளவில் கரோவா என்ற இடத்தை நெருங்கியபோது ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்த பஸ் வீதியின் பக்கவாட்டில் உள்ள சுமார் 100 அடி ஆழம் கொண்ட பள்ளத்தில் விழுந்தது.

இவ்விபத்து பற்றித் தகவலறிந்து விரைந்து வந்த மீட்புப்படையினர் 17 பேரை உயிருடன் மீட்டனர். இடிபாடுகளுக்குள் சிக்கியிருந்த 4 பிரேதங்களையும் வெளியே எடுத்தனர். காயமடைந்திருந்த அனைவரும் உடனடியாக அருகில் உள்ள மருத்துவ மனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி இருவர் அடுத்தடுத்து உயிரிழந்தனர்.





தற்போது சிகிச்சை பெற்று வரும் 15 பேரில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளமையால் இவ்விபத்தில் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகிறது. (ப)

# இந்திய வம்சாவளி நிக்கி ஹேலி அமெரிக்க அதிபராக வாய்ப்பா?



இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹேலிக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டு வருவதையடுத்து அவர் அடுத்த அமெரிக்க அதிபர் தேர்தலில் போட்டியிட வாய்ப்புள்ளது என மைக்கேல் உல்ப்ஸ் எழுதிய பயர் அண்ட் பியூரி புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டொனால்ட் ட்ரம்ப், தனது அரசில் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நிக்கி ஹேலிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். இதுவரையில் எந்தவோர் அமெரிக்க அதிபராலும் இந்தியவம்சாவளியைச் சேர்ந்தவருக்கு கபினட் அந்தஸ்தில் பொறுப்புகளைக் கொடுத்ததில்லை. ஆனால், டொனால்ட் ட்ரம்பின் ஆட்சியில் நிக்கி ஹேலி ஐ.நா வுக்கான அமெரிக்கத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும், தேசிய அரசியலில் அவருக்கு அதிக அளவில் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. ட்ரம்ப்புக்கு மிக நெருங்கிய வட்டாரத்தில் நிக்கி ஹேலி முதலிடத்தில் உள்ளார். இதனால், அவருக்கு அடுத்த அதிபர் தேர்தலில் போட்டியிடுவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளன எனவும், அவரும் அதை விரும்புகின்றார் எனவும், ஆனால், வெள்ளை மாளிகையில் முக்கிய பொறுப்பில் உள்ளஸ்டீவ் பேனன் அதனை விரும்பவில்லை என்றும் அந்தப் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ரஜனியின் கட்சியை அவர் மருமகன் கைப்பற்ற வாய்ப்பு

### இயக்குநர் அமீர் தெரிவிப்பு

ரஜனியின் உடல்நிலையைக் காரணம் காட்டி அவரின் கட்சியை மனைவி, மருமகன் ஆகியோர் கைப்பற்ற வாய்ப்புள்ளது என இயக்குநர் அமீர் கூறியுள்ளார்.

நடிகர் ரஜனிகாந்த் அரசியலுக்கு வருகின்றமை உறுதியாகிவிட்ட நிலையில் அதற்கு ஆதரவு இருந்தாலும் எதிர்ப்பும் அதிகமாக இருந்து வருகிறது.

ரஜனியின் அரசியல் தொடர்பாக பிரபல திரைப்பட இயக்குநர் அமீர் தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில்,

ரஜனியின் அரசியல் நாளடைவில் குடும்ப அரசியலாக மாறிவிடும் என அச்சம் தெரிவித்துள்ளார்.

மேலும், 33 ஆண்டுகள் ஜெயலலிதா கூடவே இருந்து சசிகலா கட்சியைக் கைப்பற்றியது போல ரஜனி முதல்வரானவுடன் அவரின் உடல் நிலையை காரணம் காட்டி மனைவி மற்றும் மருமகன் கட்சியைக் கைப்பற்ற வாய்ப்புள்ளது எனக் கேட்டுள்ளார்.

### கால்நடை தீவன ஊழல்:

# லாலு பிரசாத் யாதவுக்கு மூன்றரை ஆண்டு சிறை!

பீகாரில் நடைபெற்ற கால்நடைத் தீவன ஊழல் வழக்கில் முன்னாள் முதலமைச்சர் லாலு பிரசாத் யாதவுக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து ராஞ்சியில் உள்ள சி.பி.ஐ. நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ராஷ்ட்ரீய ஜனதாதளத் தலைவரும், பீகார் மாநில முன்னாள் முதலமைச்சருமான லாலு பிரசாத் யாதவ் மற்றும் சிலர் மீது 89.27 லட்சம் ரூபா கால்நடை தீவன ஊழல் வழக்குத் தொடரப்பட்டது. இதை விசாரித்த ராஞ்சி சி.பி.ஐ. சிறப்பு நீதிபதி சிவபால் சிங், லாலு பிரசாத் உட்பட 16 பேர் குற்றவாளி எனத் தீர்ப்பளித்தார்.



அவருக்கான தண்டனை விவரம் கடந்த 3ஆம் திகதி அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்ட நிலையில், அன்று வழங்கப்படவில்லை. பின்னர், லாலு பிரசாதின் ஆதரவாளர்கள், நீதிபதிக்குத் தொலைபேசி வழியாக மிரட்டல் விடுத்தமையின் காரணமாக கடந்த 5ஆம் திகதி வெளியிடவிருந்த தண்டனை விவரம் அறிவிப்பது ஒத்திவைக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்த வழக்கில் குற்றவாளிகள் என அறிவிக்கப்பட்டிருந்த 11 பேரின் தண்டனைக்கான வாதம் நேற்று முன்தினம் நிறைவடைந்தது. அதைத்தொடர்ந்து நீதிபதி சிவபால் சிங் நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் சுமார் 2 ஆயிரத்து 400 பக்கங்களைக் கொண்ட தீர்ப்பை வாசித்தார். தீர்ப்பின்போது சிறையில் இருந்தவாறு வீடியோ கொன்பிரன்சிங் வழியாக லாலு பிரசாத் யாதவும் நீதிமன்றில் ஆஜரானார். தீர்ப்பில் லாலு பிரசாத் யாதவுக்கு மூன்றரை ஆண்டுகள் சிறைத் தண்டனை மற்றும் 5 லட்சம் ரூபா அபராதம் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஷஸ் கடைசி டெஸ்ட்:

# ஆஸ்ரேலியா 649 ஓட்டங்கள் குவிப்பு தோல்வியை தவிர்க்குமா இங்கிலாந்து

ஆஷஸ் கடைசி டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலியா 649 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து போராடி வருகிறது.

ஆஸ்திரேலியா- இங்கிலாந்து அணிகள் இடையிலான ஆஷஸ் தொடரின் 5ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்று வருகிறது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 346 ஓட்டங்கள் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்ஸை விளையாடிய ஆஸ்திரேலியா 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்புக்கு 479 ஓட்டங்கள் எடுத்து இருந்தது. உஸ்மான் கவாஜா 117 ஓட்டங்கள் குவித்தார்.

ஷான் மார்ஷ் 98 ஓட்டங்களுடனும், மிட்சேல் மார்ஷ் 63 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று 4ஆவது நாள் ஆட்டம் இடம்பெற்றது. 133 ஓட்டங்கள் முன்னிலை, கைவசம் 6 விக்கெட் என்ற நிலையில் ஆஸ்திரேலியா தொடர்ந்து விளையாடியது.

மார்ஷ் சகோதரர்கள் மிகவும் சிறப்பாக விளையாடி சதம் அடித்தனர். ஷோன் மார்ஷ் முதலில் சதம் அடித்தார். அவர் 212 பந்துகளில் 11 பவுண்ரியுடன் 100 ஓட்டங்களைத் தொட்டார். 28ஆவது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 6ஆவது சதமாகும்.

அதைத் தொடர்ந்து அவரது சகோதரர் மிட்சேல் மார்ஷ் சதம் அடித்தார். அவர் 140 பந்துகளில் 15 பவுண்ரி, 2 சிக்ஸருடன் 100 ஓட்டங்களைத்தொட்டார். 24ஆவது டெஸ்டில் விளையாடும் அவருக்கு இது 3ஆவது சதமாகும். சதம் அடித்த சிறிது நேரத்தில் மிட்செல் மார்ஷ் 101 ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். ஷேன் மார்ஷ் 156 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தார்.

மார்ஷ் சகோதரர்கள் அபாரமான ஆட்டத்தால் ஆஸ்திரேலியா 7 விக்கெட் இழப்புக்கு 649 ஓட்டங்கள் குவித்து டிக்ளேர் செய்தது. விக்கெட் காப்பாளர் பெய்ன் 38 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.







பின்னர் 303 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. அலஸ்டைர் குக், ஸ்டோன்மேன் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். ஸ்டோன்மேன் ஓட்டங்கள் ஏதும் எடுக்காமல் ஸ்டார்க் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். அடுத்து குக் உடன் வின்ஸ் ஜோடி சேர்ந்தார். குக் 10 ஓட்டங்கள் எடுத்த நிலையில் லயன் பந்தில் போல்டானார். வின்ஸ் 18 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கம்மின்ஸ் பந்தில் வெளியேறினார்.

4ஆவது வீரராகக் களம் இறங்கிய கப்டன் ஜோ ரூட் நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால் அடுத்து வந்த தாவித் மலன் 5 ஓட்டங்களுடன் ஈட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார். இதனால் இங்கிலாந்து 68 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட்டுக்களை இழந்தது.

5ஆவது விக்கெட்டுக்கு ஜோ ரூட் உடன் விக்கெட் காப்பாளர் பேர்ஸ்டோவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 4ஆவது நாள் ஆட்டம் முடியும்வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. இங்கிலாந்து 4ஆவது நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 93 ஓட்டங்கள் எடுத்துள்ளது. ஜோ ரூட் 42 ஓட்டங்களுடனும், பேர்ஸ்டோவ் 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்துக்கு இன்னும் 210 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. இங்கிலாந்துக்கு தோல்வி அல்லது சமநிலை என்ற இரு வாய்ப்புகள் மட்டுமே உள்ளது. சமநிலை செய்ய வேண்டுமென்றால் இந்த ஜோடி இன்றைய கடைசி நாள் ஆட்டத்தில் நிலைத்து நின்று விளையாட வேண்டும். ஏறக்குறைய ஒரு நாள் முழுவதும் நிலைத்து நிற்பது எளிதான காரியம் அல்ல. இதனால் சிட்னி டெஸ்டில் ஆஸ்திரேலியா வெற்றி பெற அதிக வாய்ப்புள்ளது.



## கேப்டவுன் டெஸ்ட்

# வெற்றி முனைப்பில் தென்னாபிரிக்கா

இந்தியா- தென்னாபிரிக்கா இடை யிலான முதல் டெஸ்ட் போட்டி கேப்டவு னில் கடந்த 5 ஆம் திகதி தொடங்கியது. முதலில் துடுப்பாட்டம் செய்த தென்னாபிரிக்கா 286 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தது. புவனேஸ்வர் குமார் 4 விக்கெட் வீழ்த்தினார்.

பின்னர் இந்தியா முதல் இன்னிங்ஸைத் தொடங்கியது. ஹார்திக் பண் டையா 93 ஓட்டங்கள் அடித்து இந்தியாவின் ஓட்ட எண்ணிக்கை கௌரவமான நிலையை எட்டக் காரணமாக இருந்தார். இவரது ஆட்டத்தால் இந்தியா முதல் இன்னிங்ஸில் 209 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தது.

பின்னர் 77 ஓட்டங்கள் முன்னிலையுடன் தென்னாபிரிக்கா 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. தென்னா பிரிக்காவின் தொடக்க வீரர்களான மார்கிராம், டீன் எல்கர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இந்த ஜோடியை ஹார்திக் பண்டையா பிரித்தார். தென்னாபிரிக்கா 52 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது மார்கிராம் 34 ஓட்டங்கள் நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்து ரபாடா களம் இறங்கினார். டீன் எல்கர் 25 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஹார்திக் பண்டையா பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து ஹசிம் அம்லா களம் இறங்கினார். ஹசிம் அம்லா - ரபாடா ஜோடி 2ஆவது நாள் ஆட்ட முடிவில் மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண் டது. இதனால் தென்னாபிரிக்கா நேற்று முன்தினம் 2ஆவது நாள் ஆட்ட முடி வில் 2 விக்கெட் இழப்பிற்கு 65 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அம்லா 4 ஓட்டங்களுடனும், ரபாடா 2 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். தென்னாபிரிக்கா 142 ஓட்டங்கள் முன்னிலை பெற்றிருந்தது.

நேற்று முன்தினம் கேப்டவுனில் மழை பெய்தது. இதனால் மைதானம் ஈரப்பத மாகக் காணப்பட்டது. மைதான ஊழி யர்கள் நீரை வெளியேற்றும் பணியில் ஈடுபட்டனர். இதனால் போட்டி சரியான நேரத்தில் தொடங்கும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த நிலையில் நேற்றுக் காலை மீண்டும் மழை பெய்ததால் ஆட்டம் நேற்று நடைபெறவில்லை.

(ப)

# கேப்டவுன் டெஸ்ட்: ஸ்டெயின் விலகல்?

இந்தியாவுக்கு எதிராக நடைபெற்றுவரும் டெஸ்ட் தொடரில் இருந்து தென்னாபிரிக்க வீரர் ஸ்டெயின் காயம் காரணமாக விலக வாய்ப்புள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இந்திய கிரிக்கெட் அணி தென்னாபிரிக்கா அணியுடன் மூன்று டெஸ்ட், ஆறு ஒருநாள் மற்றும் மூன்று ரி-20 போட்டிகள் அடங்கிய தொடரில் விளையாடத் தென்னாபிரிக்கா சென்றுள்ளது. கடந்த 5ஆம் திகதி முதலாவது போட்டி ஆரம்பமாகியது.



இப்போட்டியில், தென்னாபிரிக்கா அணியில் முன்னனி வேகப்பந்து வீச்சாளர் டேல் ஸ்டெயின் சேர்க்கப்பட்டிருந்தார். ஸ்டெயின் தனது சிறப்பான பந்து வீச்சின் மூலம் இந்திய அணியின் தவான் மற்றும் சஹா ஆகியோரை முதல் இன்னிங்ஸில் பவிலியன் திருப்பினார். இதன்மூலம் 20 போட்டிகளில் 100 விக்கெட் வீழ்த்திய ஸ்டெயின், அதிவேகமாக 100 விக்கெட் வீழ்த்திய வீரர்கள் பட்டியலில் முதல் இடத்திற்கு முன்னேறினார்.

ஆனால் இந்தச் சாதனையைப் படைத்த சிறிது நேரத்தில் அவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. சிறப்பாகப் பந்துவீசி கொண்டிருந்த அவர் 18ஆவது ஓவரை வீசிக் கொண்டிருந்த போது இடது குதிகாலில் ஏற்பட்ட காயம் காரணமாக மைதானத்தை விட்டு இடையிலேயே வெளியேறினார். சிறிய காயமாக இருக்கும் என கூறப்பட்டுவந்த நிலையில், குதிகால் பகுதி தசையில் காயம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிய வந்துள்ளது.

அவர் 4 முதல் 6 வாரங்கள் வரையில் ஓய்வெடுப்பார் எனக் கூறப்படுகிறது. எனவே, அவர் இந்தியாவுக்கு எதிரான மற்ற டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதில் சந்தேகம் எழுந்துள்ளது.

(ப)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## போருக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம்தமிழ்த்தேசியவிடுதலைக் கூட்டமைப்பின் பிரசாரக் கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

இலங்கையில்இனக்கலவரம் ஆரம்பித்த காலம் தொடக்கம் தமிழ் இளைஞர்கள் பல்வேறு இயக்கங்களில் சேர்ந்து ஆயுதம் தூக்கிப் போராடினார்கள். ஆனால் அந்த இளைஞர்களின் தாய், தந்தையர்கள் சுதந்திரக்கட்சியையோ, ஐக்கிய தேசியக் கட்சியையோ அல்லது இடதுசாரிக் கட்சியையோ சேர்ந்தவர்கள் கிடையாது. தமிழர் விடுதலைக் கூட்டணி மற்றும் தமிழரசுக் கட்சியின் பாரம்பரியத்தை சேர்ந்தவர்கள்தான்அந்த மக்கள். அந்த வகையில் ஆயிரக்கணக்கான இளைஞர்களைஆயுதம்தூக்க வைத்தவர்கள் கூட இந்தப் பாரம்பரியத்தில் வந்த கட்சிகள் தான்.

ஒரு கட்டத்தில் அஹிம்சைப் போர் தோற்ற பின்னர் தந்தை செல்வநாயகம் கூறினார், ‘இளைஞர்கள்என்னைப்போல் பேசமாட்டார்கள். வேறொரு மொழியிலே பேசுவார்கள்’ – என்று. ஆயுதப்போராட்டத்திற்கு பிள்ளையார் சுழி போட்டவர் தந்தை செல்வா. அவர்கள் போட்ட பிள்ளையார்சுழிதான் முப்பது வருட காலத்தில் ஆயுதப்போராட்டம்உச்சக்கட்டத்தை அடைந்த நிலையில்தான் உலகம் தமிழ் மக்களைத் திரும்பி பார்த்தது.

தமிழ் மக்களுக்கு இந்த நாட்டிலே பல்வேறு மனித உரிமைகள்மறுக்கப்பட்டன.படுகொலைகள்இடம்பெற்றன.இனஅழிப்பு நடைபெற்றது என்பது ஆயுதப்போராட்டத்தின்மூலமேஉலகுக்கு உணர்த்தப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து நீண்ட சகிப்புத் தன்மையுடன் இருந்தோம். மக்கள் எங்களுக்கு கொடுத்த ஆணையை ஏற்று கிட்டத்தட்ட 16 வருடங்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒரு சர்வதிகாரத் தலைமையின் கீழ் நாங்கள் இருந்தோம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒற்றுமை குலையக் கூடாது, எங்கள் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக நீண்ட பொறுமை காத்திருந்தோம். அத்துடன் முடிந்த அளவு இந்தச் சர்வாதிகாரத் தலைமையைத் திருத்துவதற்கு முயற்சி எடுத் தோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஜனநாயகம் இல்லை. வெளிப்படைத்தன்மை இருக்கவில்லை.

தமிழ் மக்களின் தலையில் மண்ணை அள்ளிப்போடுவதற்காக ஒன்றுமில்லாத இடைக் கால அறிக்கைக்கு மக்களின் ஆணையைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சி எடுக்கின்றது. இது ஒட்டு மொத்த தமிழ் மக்களையும் குழிதோண்டிப் புதைக்கின்ற ஒரு செயற்பாடு.

இந்தத் தேர்தல் முடிந்த பிற்பாடு ஐ.நா.மனித உரிமைகள் சபை இலங்கை அரசு தொடர்பான ஓர் அறிக்கையைச் சமர்ப்பிக்க இருக்கிறது. ஏற்கனவே இரண்டு வருட கால நீடிப்புடன் மீண்டும் எமது நாடாளுமன்றமும்மாகாண சபை உறுப்பினர்களின் கையொப்பத்துடன் மீண்டும் இரண்டு வருடம் கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் அறிக்கையிலிருந்து தப்பிப்பதற்காக இலங்கை அரசு தமிழரசுக் கட்சியைப் பயன்படுத்தி இந்தத் தேர்தலில் ஒன்றுமேயில்லாத இடைக்கால அறிக்கைக்குத் தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளார்கள்,ஆகவேசிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் இணைந்ததான் புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வந்திருக்கிறோம், ஆகவே இந்த யாப்பினூடாகத்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் கான உள்ளோம் என ஒரு செய்தியை அரசும் தமிழரசுக் கட்சியும் சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சொல்லத் தயாராக இருக்கிறார்கள்.

ஆகவேஅப்படிப்பட்ட ஒருபடு பாதகமானவேலைக்குநாங்கள் துணைபோகக் கூடாது. – என்றார். (ஐ)

## ஊடகங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் நடைபெற்ற வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஊடகங்கள் செய்யும் தவறுகள் தொடர்பில் நான் அண்மைக் காலமாக குற்றஞ்சுமத்தி வருகிறேன். இதில் ஊடகங்களுக்கு எதிராக வெற்றியும் கண்டுள்ளேன். சில தினங்களாக ஊடகங்கள் என் மீது பழி சுமத்தி வருகின்றமையை அனைவரும் அவதானித்து இருப்பீர்கள். சில ஊடகங்கள் நான் பாவித்த சொல்லை விடுத்து அதற்குள் வேறு ஒரு சொல்லைப் புகுத்தி வேண்டுமென்றே பொய்யைப் பிரசுரிக்கின்றன.

ஊடகங்களுடன் சண்டை பிடித்துக் கொண்டும் தேர்தலில் எம்மால் வெற்றி பெற முடியும். ஊடகங்கள்தெரிந்துகொண்டே விசமத்தனமானகாரியங்களில் ஈடுபடக் கூடாது. மக்களுடைய சிந்தனைகளை கவர்வதற்கான போராட்டம் தற்போது இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடும் அனைத்துச் சபைகளிலும் வெற்றி பெற்றிடுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. இதில் வெற்றி பெறுவதுஎமதுகட்சிக்குமக்கள் ஆதரவு உண்டு என்பதை உலகறியசெய்வதேஆகும்.மக்கள் மனதில் எழும் கேள்விகளுக்குபதில்கூறும்வகையில் விளக்கங்களைத் தெளிவாகக் கூறிக்கொண்டுவருகின்றோம். இந்தத்தேர்தல்வடக்கு – கிழக்கு மாகாணங்களில் மக்கள் ஆர்வத்தை வெளிக்கொணர்வதாக இருக்கும். தெற்கில் சில நிலையற்றசூழல்இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது.எமது பக்கத்தில்நாம்திடமாகஉள்ளோம் என்பதை வெளிக்கொணர வேண்டும். எமது பக்கத்தில் எந்த தவறும் இடம்பெறவில்லை.எமதுமக்கள்ஒருமித்து நிற்கிறார்கள் என்ற செய்தி இந்தத் தேர்தலின் மூலம் வர வேண்டும். எமது மக்களுக்கு நாம் துரோகம் இழைக்கவும் இல்லை. அடிப்படை நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறவும் இல்லை. எமது இனத்தின் பூரணவிடிவுலுக்கானபொறுப்பு ஒவ்வொருவேட்பாளருடைய கைகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது. – என்றார்.

இந்த நிகழ்வில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர்தேவசகாயம்பிள்ளை கலந்து கொண்டார். இந்த நிகழ்வில் தமிழரசுக் கட்சியின் சாவகச்சேரி இணைத்தலைவர் அருந்தவபாலன் கலந்து கொள்ளவில்லை. (ஐ–2)

## தமிழீழமா?...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமையவுள்ளது.

எனவே நாடு இரண்டாகப் பிளவுபடுவதற்கு நாம் எதிரானவர்கள் என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஒவ்வொருவரும் தமது வாக்குகளை பயன்படுத்த வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்றுமுன்தினம் மாலை கடவத்தையில் நடைபெற்றது. அந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயேஅவர்இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும்குறிப்பிட்டவைவருமாறு:–

நல்லாட்சி அரசாங்கம் புதிய அரசமைப்பைக் கொண்டு வந்து நாட்டை இரண்டாகப் பிரித்து, தமிழ் ஈழம் அமைப்பதற்கு எதிர்பார்த்துள்ளது. எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தமிழ் ஈழத்திற்கு இடமளிப்பதா, இல்லையா என்பது தொடர்பில் தீர்மானிக்கவுள்ளது. ஆகவே, தமிழ் ஈழம் அமைத்து நாட்டை இரண்டாகப் பிரிப்பதற்கு நாம் எதிரானவர்கள் என்பதை வெளிப்படுத்தும் வகையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒவ்வொருவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதனை உறுதிப்படுத்துவதாயின் தாமரை மொட்டுச் சின்னத்தைக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு வாக்களிக்க வேண்டும்.

நாடு தற்போது மிகவும் பாரதூரமான நிலையில் சென்று கொண்டிருக்கிறது. சகல துறைகளிலும் வீழ்ச்சி காணப்படுகிறது. பொருளாதாரம் சீரழிந்துள்ளது. இவ்வாறான நிலையில் எதிர்க்கட்சியும் அதற்கெதிராக குரல் கொடுப்பதாக இல்லை.

எமது ஆட்சிக் காலத்தில் நாட்டை முன்னேற்றப் பாதையில்இட்டுச்சென்றோம்.அவ்வாறு முன்னேற்றிய நாடு இன்று பாதாளம் நோக்கிப் பயணிப்பதைஎம்மால்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆகவே தான் நாம்இவ்வாறானநடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளோம்.

நாட்டில் முறையான ஆட்சியைக் காண முடியாதுள்ளது. அமைச்சர்களுக்கிடையில் குழப்பம். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும்இடையில்பனிப்போர் நடைபெறுகிறது. அரசாங்கத்திடம் முறையான கொள்கைத் திட்டம் இல்லை. – எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ)

## இல்லாததையும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழினம் தழைக்க ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றே எனது அறிக்கை அமைந்திருந்தது. ஆனால், வடக்கு மாகாண முதல்வரோ இல்லாததையும்பொல்லாததையும் எழுதி தமிழ் மக்களைக் குழப்ப முற்படுகின்றார்.

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கிருஷ்ணபிள்ளை துரைராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண முதலமைச்சர்விக்னேஸ்வரனின்அறிக்கை ஒன்று தொடர்பில் அவர் ஓர் அறிக்கை வெளியிட்டிருந்தார். அதற்கு முதல்வர் வெளியிட்ட பதிலடி அறிக்கை குறித்துத் தற்போது கருத்துத் தெரிவித்த போதே துரைராஜசிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில்அவர்மேலும் தெரிவிக்கையில் –

“விக்னேஸ்வரன் ஐயா எனக்குத் துரோணாச்சாரியார். நான் அருச்சுனன் அல்லன். என்றாலும், ஐவரில் ஒருவன் இல்லையென்றாலும், ஏகலைவன். அவருக்கு அளிக்கவேண்டிய கண்ணியத்தை வழங்கி ‘உள்ளதையும்நல்லதையும்’சொன்னேன்; விதியே, விதியே தமிழச் சாதியை என்ன செய்ய நினைத்தாய்? என்று நொந்தேன்.

அவர்இல்லாததையும்பொல்லாததையும் எழுதுகின்றார். தமிழ் மக்களைக் குழப்ப முற்படுகின்றார். ‘எய்தற்கரிய தியைந்தக்கால் அந்நிலையே செய்தற்கரிய செயல்’ என்ற வள்ளுவர் போல், ஏற்பட்டுள்ள சூழ்நிலையைத் தவறவிடாது தமிழினம் தழைக்க ஒன்றிணைந்து செயற்படுவோம் என்றேன்.

‘தண்ணீர் விட்டோ வளர்த்தோம், சர்வேசா! இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம்; கருகத் திருவுளமோ?’ என்று ஏங்குவதை விட என்ன செய்ய?

நாம் முடியுடை வேந்தர் பரம்பரை. ‘வடவேங்கடம் முதல், தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகை’ எப்படியோ சுருக்கி இன்று குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுகின்றோம்.

‘கற்றூணாய் நொருங்குவோமன்றி, காலமறிந்து செயற்படோம்’என்றிருப்பதுதமிழர்தம் தலைவிதியாக மாறிவிடக் கூடாது என்பது என் எண்ணம். ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’ என்கிறது புறநானூறு.

துரோணாச்சாரியார் விஸ்வாமித்திரராக விஸ்வரூபம் எடுக்கின்றார். நான் கொக்கு அல்ல. எனினும், அவர் மீதான மதிப்பும் மரியாதையும்என்றும் உள்ளபடியே இருக்கும். இனிமேல் இதுபற்றி நான் தொடமாட்டேன். ‘தொடங்கியவரே முடிப்பவரும் ஆவார்’ என்ற மரபுப்படிஐயாஅவர்கள்முடித்து வைப்பதாயினும்சரிஅதுஅவர் திருவுளம்” –என்றுகுறிப்பிட்டார் துரைராஜசிங்கம்.

## பிணைமுறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

ஊழல், மோசடிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து, குற்றவாளிகளைத் தண்டிப்பதும் நல்லாட்சி அரசின் பிரதான நோக்கங்களுள் ஒன்றாகும். இதன் பிரகாரமே எமது ஆட்சியிலும் ஏதேனும் குற்றச்சாட்டுகள் இடம்பெற்றால் அவை தொடர்பில்விசாரணைமுன்னெடுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. பிணைமுறி மோசடி விவகாரம் குறித்து குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டபோது அது சம்பந்தமாக விசாரணை நடத்துவதற்காக அன்று ஒரு குழுவை நியமித்தேன். அந்தக் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர், இந்த விடயம் குறித்து சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான கோப் குழுவும் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பித்தது.

அடுத்தகட்ட சட்டநடவடிக்கைகளுக்காக மேற்படி அறிக்கையை 2016ஆம் ஆண்டு ஒக்டோபர்30ஆம்திகதிசட்டமா அதிபருக்கு அனுப்பிவைத்திருந்தேன். இவ்வாறானதொரு பின்புலத்திலேயே ஜனாதிபதி ஆணைக்குழு அமைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஜனாதிபதி முன்வைத்த விடயங்களுக்கு இணக்கம் வெளியிட்டேன். அதுமட்டுமல்ல,மூன்றுஅமைச்சர்கள் ஆஜராகி சாட்சியங்களையும் வழங்கியிருந்தோம். இதற்கு முன்னர் இலங்கையில் இப்படி நடந்தது இல்லை. விசாரணை அறிக்கை வெளிவந்துள்ளது. அடுத்த கட்ட நடவடிக்கைக்காக அது சட்டமா அதிபரிடம்கையளிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை பற்றி நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படவேண்டும் என்று கூட்டு எதிரணியின் எம்.பி. தினேஷ் குணவர்தன என்னிடம் கோரினார். ஏனைய கட்சிகளின் கோரிக்கைகளையும் ஊடகங்கள்வாயிலாகஅறிந்தேன். இது விடயத்தில் எமக்கும்பிரச்சினை இல்லை. எனவே, உடனடியாக நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு நான் சபாநாயகரிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

நாம் நேர்மையாகவே நடந்திருக்கின்றோம். ஒரு சம்பவம் தொடர்பில்எந்தநாட்டில்மூன்று தடவைகள் விசாரணை நடத்தப்பட்டுள்ளது? கோரிக்கை விடுக்கப்படும்போதெல்லாம் எந்த நாட்டில் விவாதத்துக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது? பிணைமுறிமோசடி தொடர்பில் மூன்றாவது தடவையும் விவாதம்நடைபெறவுள்ளது. எனவே, இங்கு ஒளிப்பதற்கு ஒன்றுமில்லை.

அதேவேளை, 2008ஆம் ஆண்டிலிருந்து இப்படியான மோசடி இடம்பெற்றுள்ளது என ஆணைக்குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அப்படியாயின் 2008ஆம் ஆண்டு முதல் பாரிய மோசடிகள் பல நடந்துள்ளன. ஊழியர் சேமலாப நிதி சுரண்டப்பட்டுள்ளது. அனுமதியின்றி ஏலமிடப்பட்டுள்ளது. இதனால் பல நூறு கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது. ஒரு லட்சம் கோடி ரூபாவை மஹிந்த ராஜபக்ஷ மக்களுக்குக் கடன் சுமையாக விட்டுச் சென்றுள்ளார். – என்று குறிப்பிட்டுள்ளார்.

## தீர்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

‘தமிழ் மக்களின் விடிவுக்காக நாம் தொடர்ந்து முயற்சிகளை முன்னெடுக்கவேண்டுமாயின் வீட்டுச் சின்னத்துக்கு மக்கள் வாக்களிக்கவேண்டும். இதுவரை மக்களின் ஆணை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே உண்டு. அந்த நிலை பெப்ரவரி 10இற்குப் பின்னர் சரிந்தால்நிலைமைவேறாகும். கூட்டமைப்புக்கான மக்களின் ஆணை சரிந்துவிட்டது என்ற செய்தி வருமானால் புதிய அரசமைப்பின் நிறைவேற்றமுடியாது’ –என்றுதமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

வடமராட்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அறிமுக நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் இந்தக் கருத்துத் தொடர்பில் செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே சட்டத்தரணி சுகாஷ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சரிவு தொடர்பில் அந்தக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் உணர்கிறார். அதேநேரம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எழுச்சியைக் கண்டு அவர் அச்சமடைந்துள்ளார்.

அவரால் கூறப்படும் அரசமைப்பு மாற்றத்தை யார் ஏற்றுக்கொண்டார்கள்? சமஷ்டி இல்லை; வடக்கு – கிழக்கு இணைப்பில்லை, பௌத்த மதத்துக்கே முன்னுரிமை ஆகியவிடயங்களைக்கொண்ட புதிய அரசமைப்பை மக்கள் ஏற்கமாட்டார்கள். மக்களைத் திரட்டி அதற்கு எதிராகப் போராடுவோம். – என்றார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நலன்சார்ந்த பணிகளை முன்னெடுப்பவர்கள் யார் என்பதை மக்கள் உணர்ந்து செயற்படவேண்டும்

திருமலை, ஜன. 08

மக்கள் நலன்சார்ந்த பணிகளை முன்னெடுப்பவர்கள் யார்என்பதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும், திருகோணமலை மாவட்டத்தில் இனிவரும் காலங்களில் கட்சியை வலுப்படுத்தி வளர்த்தெடுப்பதற்கு கட்சித் தோழர்களும் ஆதரவாளர்களும் சவால்களையும் இடர்பாடுகளையும் எதிர்கொண்டு அர்ப்பணிப்புடன் உழைக்கத் தயாராக வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்ட கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற வேட்பாளர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் வட பகுதியில் மட்டுமே எமக்கு சாதகமான சூழல் இருந்த காரணத்தால் நாம் தொடர்ச்சியாக எமது அரசியல் செயற்பாடுகளை அதிகளவில் அங்கு முன்னெடுத்து வந்தோம்.

ஆனால், கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தளவில் மக்கள் எமது கட்சிக்கான ஆதரவை முழுமையாகத் தராத சூழலில் இங்கு தொடர்ச்சியாக எமது பணிகளை முன்னெடுக்க முடியாது போனது .

ஆனாலும், கிழக்கு மாகாகண மக்கள் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திருகோணமலை மாவட்டத்தில் மட்டுமல்லாது அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களிலும் எமது மக்கள் பணிகளை முன்னெடுக்க நாம் தயாராகியுள்ளோம்.

அதனடிப்படையிலே நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கிழக்கு மாகாணத்திலும் போட்டியிடுகின்றோம்.



**திருமலையில் டக்ளஸ் தேவானந்தா**

கடந்த காலங்களில் இம் மாவட்டத்தில் நாம் 10 இற்கும் மேற்பட்ட குடியேற்றத் திட்டங்களை உருவாக்கி எமது மக்களை அடிப்படை வசதிகளுடன் குடியேற்றியிருந்தோம். அன்று நாம் அவ்வாறு குடியேற்றாதிருந்திருந்தால் இன்று அந்த நிலங்கள் வேறு நபர்களிடம் கைம்மாறியிருக்கும் நிலை உருவாகியிருக்கும் என்றும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இவ்வாறு மக்களுக்காக உழைத்துவரும் எமது பணிகளைப் பொறுத்துக்கொள்ள முடியாத சில தமிழ் ஊடகங்கள் எம்மீது திட்டமிட்டவகையில் சேறுபூசும் நடவடிக்கைகளிலும் அவதூறுகளைச் சுமத்தும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

ஆனாலும், எமக்கு மக்கள் முழுமையான ஆதரவைக் தரும்பட்சத்தில் ஏனைய கட்சிளைப்பார்க்கிலும் எமது கட்சியின் செயற்றிட்டங்கள் மற்றும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தும் வகையில் கட்சியின் ஆதரவாளர்களும் செயற்பாட்டாளர்களும் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும்.

இங்கு பல கட்சிகள் போட்டியிட்டாலும் மக்கள் நலன் சார்ந்த பணிகளைமுன்னெடுப்பவர்கள் யார் என்பதை மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

(க)

## துமிந்த திஸாநாயக்க பதவி விலக வேண்டும்

### ரஞ்சித் டி சொய்சா தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 08

அமைச்சர் துமிந்த திஸா நாயக்க, கமத்தொழில் அமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.



நாட்டில்தற்போது விவசாயம் வீழ்ச்சியடைந்துள்ளமைக்கு அமைச்சர் துமிந்த திஸாநாயக்கவே பொறுப்பு எனவும் அவர் கூறியுள்ளார்.

எட்டியாந்தோட்டையில் நடைபெற்ற ஸ்ரீ லங்கா பொது ஜன முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ரஞ்சித் இதனைக் குறிப்பிட்டார்.

அதேவேளை, தேசிய அரசில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பதவிகளுக்கும் சிறப்புரிமைகளை எதிர்ப்பார்த்தும் அரசால் அங்கம் வகித்து வருகின்றனர் என இந்த கூட்டத்தில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் கணக ஹேரத் தெரிவித்துள்ளார்.

(க)

## தமிழ்தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் வேட்பாளர் அறிமுக கூட்டம் மன்னாரில்





மன்னார், ஜன. 08

மன்னார் மாவட்டத்தில் எதிர்வரும் உள்ளூராட்சி தேர்தலில் களமிறங்கும் தமிழ்த் தேசிய விடுதலை கூட்டமைப்பின் வேட்பாளர்களின் அறிமுகக் கூட்டம் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கூட்டம் நகர சபையின் முன்னாள் உப தலைவரும் மன்னார் நகர சபை வேட்பாளருமான ஜேம்ஸ் ஜேசுகாதஸ் தலைமையில் மன்னார் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது மன்னார் மாவட்டத்தில் நான்கு உள்ளூராட்சி மன்றங்களிலும், தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் சார்பாக உதய சூரியன் சின்னத்தில் போட்டியிடும் வேட்பாளர்களின் அறிமுகம் இடம்பெற்றது.

ஈ.பி.ஆர்.எல்.எப்.கட்சி யின் தலைவர் சுரேஸ் பிரேமச் சந்திரன், நாடாளுமன்ற உறுப் பினர் சிவசக்தி ஆனந்தன் மற்றும் ஜனநாயக தமிழரசுக் கட்சியின் செயலாளர் வி.எஸ்.சிவகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மீன் ஏற்றுமதியில் 3 ஆம் இடம் பிடிக்க இலங்கை அதீத முயற்சி



கொழும்பு, ஜன. 08

மீன் ஏற்றுமதி துறையில் இலங்கை 11 ஆவது இடத்தில் அமைந்துள்ளது.

எதிர்வரும் 2020 ஆம் ஆண்டளவில் மீன் ஏற்றுமதியில் இலங்கையை மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றுவது எமது இலக்காகும் என்று கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார்.

கடற்றொழில் துறையின் வளர்ச்சியைத் தொடர்ந்தும் மேற்கொள்ள எதிர்பார்க்கிறோம் என்றும் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை சந்திக்க உள்ளார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, ஜன. 08

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை நாளை செவ்வாய்க்கிழமை திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்திக்கவுள்ளார்.

மத்திய வங்கியில் இடம் பெற்ற சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி தொடர்பான விசாரணை அறிக்கை வெளிவந்துள்ள நிலையில் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை ஜனாதிபதி மைத்திரி அழைத்திருக்கின்றமை கொழும்பு அரசியல் அரங்கில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் 9 கூட்டணி கட்சிகளின் தலைவர்களைக் கொழும்பில் வைத்து சந்திக்க ஜனாதிபதி முடிவுசெய்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகள் உள்ளிட்ட முக்கிய விடயங்கள் இதில் கலந்துரையாடப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வருடத்தில் ஜனாதிபதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களைச் சந்திக்கும் முதல் கூட்டமாக இது அமையவுள்ளது.

கூட்டு அரசு 2020ஆம் ஆண்டுவரையில் தொடரும் எனப் பல்வேறு தரப்பினரும் அறிவித்து வந்தாலும் கூட்டு அரசுக்குள் பிணைமுறி மோசடி விவகாரம் தற்போது சூடு பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத்தில் ஈழ அகதிகள் முகாமில் மத்திய அரசு அதிகாரிகள் திடீர் ஆய்வு


## மாநில அதிகாரிகள் மத்தியில் பதற்றமாம்

தமிழ்நாட்டில் ஈழத்தமிழ் அகதிகள் தங்கியுள்ள முகாம்கள் சிலவற்றில், இந்திய மத்திய அரச அதிகாரிகள் குழுவொன்று திடீர் ஆய்வு மேற்கொண்டுள்ளது. இதனால் மாநில அரச அதிகாரிகள் மத்தியில் பதற்றம் ஏற்பட்டுள்ளதாக இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.


திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ரெங்கபுரம் அகதிகள் முகாமில் மத்திய அரசு அதிகாரிகள் திடீர் ஆய்வு ஒன்றை மேற்கொண்டனர்.

அவர்கள் முகாமில் தங்கியுள்ள அகதிகள் மற்றும் அதனை நிர்வகிக்கும் அதிகாரிகளுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, மத்திய அரச அதிகாரிகளிடம் அகதிகள் சில மனுக்களை கையளித்துள்ளனர். தமது உடைமைகளுடன் தாயகம் திரும்புவதற்கு மத்திய அரசாங்கம் கப்பல் போக்குவரத்து வசதிகளை செய்து தர வேண்டும் என்று அகதிகள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




## சின்மயா மிஷனின் உலகத் தலைவரின் அருளுரை நல்லூரில்



சின்மயாமிஷனின் உலகளாவிய தலைவர் பூஜ்ய முக்கியசுவாமி ஸ்வரூபானந்தாஜி வழங்கும் 'வாழ்வின் முகாமைத்துவ நுட்பங்கள்' (LIFE MANAGEMENT TECENIQUES) என்ற தொனிப் பொருளிலான ஆன்மீக அருளுரை தமிழ் மொழி பெயர்ப்புடன் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிமுதல் 7 மணி வரை நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் இடம்பெறும். யாழ் சின்மயா மிஷனின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (இ)





யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சுகாதாரக் கழகத்தினால் கல்லூரியின் புதிய அதிபர் சதா நிமலனின் வழிகாட்டலில் பாடசாலைச் சுற்றுப்புறச் சூழல் துப்புரவாக்கப்பட்டு, 'வருமுன் காப்போம்' எனும் தொனிப் பொருளின் கீழ், பாடசாலையிலுள்ள சகல வகுப் பறைகள், பிரார்த்தனை மண்டபம், மாணவர் விடுதி என்பன யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரியின் ஆதரவில் புகையூட்டல் செயற்பாடு கடந்த வாரம் இடம்பெற்றது. நாட்டின் பல பகுதிகளில் டெங்குநோய் தாக்கம் அதிகரித்து வருவதை அடுத்தே இந்த முன்னெச்சரிக்கைச் செயற்பாடு இடம்பெற்றது.

திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி

எமது கல்லூரியால் நடத்தப்படும் பின்வரும் பாடங்களுக்கான 2018 ஆம் ஆண்டுக்குரிய புதிய வகுப்புக்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பிரதான பாடங்கள்
★ வாய்ப்பாடு
★ வீணை
★ புல்லாங்குழல்
★ ஓர்கன் (கீபோட்)
★ ட்றம்
★ சித்திரம்
★ நடனம் (பரதம், கதகளி, மோகினி)
★ வயலின்
★ மிருதங்கம்
★ கிற்றார்
★ ஒக்ரோபாட்
★ நாடகமும் அரங்கியலும்

சிறப்பு பாடங்கள்
★ கூத்து
★ கண்டிய நடனம்
★ யோகாசனம்
★ அழகுக்கலை(முக ஒப்பனை, தலையலங்காரம், கேக் ஐசிங், சேலை அலங்காரம்,தையல்)
★ பண்பாடு (கிறிஸ்தவக் கலைகள், சைவசித்தாந்தம்)

துணைப் பாடம்
★ ஆங்கிலம்

இப்பாடங்களைப் பயில விரும்புவோர் எமது கல்லூரியில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து 25.01.2018 வியாழக்கிழமைக்கு முன்பாக ஒப்படைக்கவும்.

மேலதிக விவரங்களுக்கும் தொடர்புகளுக்கும்
அதிபர் கலைத்தூது அழகியல் கல்லூரி
இல.128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 222 9419

S WORLD
யாழ். மண்ணில் முதன் முறையாக
திகிலூட்டும் 9D சினிமா
Video Games
Pool Game
சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் தங்களின் பொழுதுபோக்கை சந்தோசமாகக் களிக்கக் கூடிய இடம்.
730, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
077 984 3952





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.01.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.